பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை (20.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 24

# பல்கலை சமூக அமைதிப் பேரணியில் இராணுவம் துப்பாக்கிச் சூடு; தடியடி!

## கண்மூடித்தனமாக நடந்த தாக்குதலால் நேற்று பரமேஸ்வராச் சந்தி ரணகளம்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்20

**யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் மேற்கொண்டு வந்த தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுற்பகல் பல்கலைக்கழக சமூகத்தினர் துணைவேந்தர் தலைமையில் நடத்திய அமைதிப் பேரணியை இராணுவத்தினர் அடித்து நொருக்கி, சுட்டுக்கலைத்து தமது இரும்புக் கரம் கொண்டு அடக்கினர்.**

**பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஒன்றுதிரண்டு பல்கலைக்கழகத்தில் இருந்து பேரணியாகப் புறப்பட்டு பரமேஸ்வராச் சந்திப்பகுதிக்கு வந்தபோது அங்கு ஏற்கனவே தயாராக நின்றிருந்த படையினர் பேரணியைத் தடுத்து நிறுத்தித் தாக்கத்தொடங்கினர்.**

முதலில் ஆகாயத்தை நோக்கிச் சுட்ட படையினர் பின்னர் பேரணியில் கலந்து கொண்டவர்களை நோக்கி கண்டபடி சுடத் தொடங்கினர்.

சரமாரியாகக் குண்டுகள் பாய்வது கண்டு பேரணியில் கலந்துகொண்ட பலநூற்றுக் கணக்கானோர் அங்கும் இங்கும் சிதறி ஓடினர். அப்போது நாலாபுறமும் ஒழுங்கைகள் வழியே வந்துகுவிந்த துருப்பினர் துப்பாக்கிகளாலும் கொட்டன்களாலும். மக்களைத் தாக்கத் தொடங்கினர். பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள், மாணவிகள் என்று எவரையும் விட்டுவைக்காது படையினர் தாக்குதல் நடத்தினர். துப்பாக்கிச் சூடு பட்டும், தாக்குதலுக்கு இலக்காகியும் தரையில் வீழ்ந்த பலரும் படையினரால் மிதித்து உதைக்கப்பட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## செல்போன், பேர்ஸ் மாயமான மர்மம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் நேற்று இடம்பெற்ற களேபரத்தின்போது பலரின் கையடக்கத் தொலைபேசிகள், பணப்பைகள் தவறி வீதியில் வீழ்ந்தன என்றும் -

ஆனால் படையினரின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அவற்றை எடுக்காமல் அவர்கள் ஓடித்தப்பினார்கள் என்றும் - கூறப்படுகிறது.

படையினர் அங்கிருந்து அகன்றபின்னர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாலா - சொல்ஹெய்ம் இன்று சந்திப்பு

லண்டன்,டிசெ.20

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் நோர்வே அமைச்சரும் இலங்கை அமைதி நடவடிக்கைக்கான விசேட பிரதிநிதியுமான எரிக் சொல்ஹெய்மும் இன்று செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் சந்தித்துப் பேச உள்ளனர்.

## கலைப்பீடாதிபதிக்கு அடிகாயம் விரிவுரையாளருக்குச் சூடு!

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரின் பேரணி மீது படையினர் நேற்று நடத்திய கொடூரத்தாக்குதலில் கலைப்பீடாதிபதி, பொருளியல்துறை விரிவுரையாளர், மருத்துவ பீட மாணவர் ஒன்றியத் தலைவர், ஊடகவியலாளர்கள் உட்பட பன்னிரெண்டுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்கள் யாழ்.பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் பேரணியின் முன்பாகச் சென்று கொண்டிருந்தபோது படையினரால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டார். ''நாங்கள் பல்கலைக்கழக அலுவலர்கள்'' என்று சிங்களத்தில் கூறி

**காயமடைந்தவர்களின் செவ்வி உள்ளே**

அவர் மன்றாடிய போதும் சிப்பாய்கள் அவரை துப்பாக்கியின் அடிப்பாகத்தினால் அடித்துத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ‘உதயன்’ செய்தியாளர் உட்பட 4 ஊடகவியலாளரும் காயம்!

யாழ்ப்பாணம், டிசெ.20

'உதயன்' அலுவலகச் செய்தியாளர் ஒருவர் உட்பட பத்திரிகைகளின் செய்தியாளர்கள் நால்வரும் நேற்றுப் படையினரின் தாக்குதல்களில் காயமடைந்தனர். அந்த நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

பேரணி தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காகச் சென்றிருந்த சமயமே இவர்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். இவர்களது படப்பிடிப்பு கருவிகளும் படையினரால் பறித்து வீசப்பட்டன.

தாங்கள் ஊடகவியலாளர்கள் என்பதை நிரூபிக்க முயற்சித்தபோதும் படையினர் கண்மூடித்தனமாக இவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். (16ஆம் பக்கம் பார்க்க)

**மேலும் செய்திகள், படங்கள் 2ஆம், 5ஆம், 7ஆம், 10ஆம், பக்கங்களில்...**

## துணைவேந்தரும் தாக்கப்பட்டார் மாணவர் ஒன்றியம் கூறுகின்றது

யாழ்ப்பாணம், டிசெ.20

நேற்று அமைதிப் பேரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரும் கூட தாக்குதலுக்கு இலக்கானார் என இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் (யாழ்ப்பாணம்) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'இராணுவ வெறியாட்டத்திற்குப் பதிலடி கொடுக்கத் தயாராகும் மாணவ சமூகம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று அமைதியான முறையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தை நோக்கி பல்கலைக்கழகத் துணைவேந்தர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் பேரணியாக சென்ற வேளை, ஸ்ரீலங்கா இராணுவம் நடத்திய கொலை வெறியாட்டத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதில் துணைவேந்தர், நாடாளுமன்ற உறுப்பினர்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## அடக்குமுறைகளை உடன் நிறுத்தாவிட்டால் படையினருக்கு யாழ். மண் புதைகுழியாகும்

### பொங்கி எழும் மக்கள் படை எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.20

அடக்குமுறைகளை நிறுத்தாவிட்டால் படையினருக்கு யாழ். மண் புதைகுழியாகும் என்று மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

'இது ஓர் எச்சரிக்கை' என்ற தலைப்பில் பொங்கி எழும் மக்கள் படை என்ற அமைப்பு வெளியிட்ட பிரசுரத்திலேயே இந்த எச்சரிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில நாள்களாக மக்களது இயல்பு வாழ்க்கையை சிதறடித்து போர்நிறுத்த உடன்படிக்கையை சிறிலங்கா இனவெறிப் படைகள் அப்பட்டமாக மீறிவருகின்றனர். சமாதானத்திற்கான பாதை முடங்கி விட்டது.

யாழ்.மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தும் தக்க வைத்துப் போரினை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கான தயாரிப்புகளை சிறிலங்கா அரசாங்கம் தொடக்கி விட்டது. ஸ்ரீலங்காப் படைகளின் சிங்கள பௌத்த பேரினவாதப் போக்கு தமிழ் மக்களைக் கோரமாகப் பலியாக்கத் தொடங்கிவிட்டது என்பதற்கு கடந்த நாள் சம்பவங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இன அழிப்புப் போரைக் கட்டவிழ்த்து, யுத்தத்தை தமிழர்கள் மீது திணித்தால் தேசத்தையும் மக்களையும் தற்காக்கும் நடவடிக்கையை உறுதியாக முன்னெடுப்பார்கள் என்று புலிகள் எச்சரிக்கை!

கிளிநொச்சி, டிசெ.20

தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தைத் திணித்து, இன அழிப்புப் போரைக் கட்டவிழ்த்தால் எமது தேசத்தையும், மக்களையும் தற்காக்கும் நடவடிக்கையை நாம் உதாசீனம் செய்யமுடியாமல் போகும். அந் நடவடிக்கைகளை எமது தலைமைப்பீடம் உறுதியாக முன்னெடுக்கும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் நேற்று கிளிநொச்சியில் வைத்து விசேட செவ்வி ஒன்றை 'உதயனு'க்கு அளித்தார். அந்த செவ்வியிலேயே தமது அமைப்பின் இந்த நிலைப்பாட்டை அவர் தெளிவாக வெளிப்படுத்தினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் அளித்த செவ்வியில் தெரிவித்ததாவது:-

இளம் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதும், கொலை செய்வதும், பொதுமக்கள், மாணவர் மீது தாக்குதல் நடத்துவதும் போன்ற தொடர்ச்சியான வன்முறையை எங்கள் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அடுத்து ஓர் இன அழிப்புப் போரைக் கட்டவிழ்ப்பதற்கான ஓர் ஆரம்பம் போலவே இவை எங்களுக்குத் தென்படுகின்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாத்வீகமாக தரையில் வீழ்ந்து படுத்தபோதும் கண்மூடித்தனமாகப் படையினர் தாக்கினர்!

## நேற்றைய சம்பவம் குறித்து துணைவேந்தர் விளக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.20

இராணுவத்தினர் சுடும்போது நாம் சாத்வீகமாகவே போராட்டத்தை நடத்துகின்றோம் என்பதைக் காட்டுவதற்கு தரையில் வீழ்ந்துபடுத்தோம். அதனைக் கூடப்பொருட்படுத்தாமல் எம்மீது கண்மூடித்தனமாக இராணுவத்தினர் காடைத்தனம் புரிந்தனர் இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்

அமைதிப் பேரணி மீது படையினர் நடத்திய தாக்குதல் தொடர்பாக நேற்றுமாலை யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியதாவது:-

இன்றையநாள் எமது பல்கலைக்கழகத்திற்கு கறைபடிந்தநாள். பல்கலைக்கழக சமூகத்தின் நியாயமான கோரிக்கையை அகிம்சை வழியில் தெரியப்படுத்துவதற்காக சென்றபோது இராணுவத்தினர் எம்மீது கண்மூடித்தனமாகத் தாக்குதலைத் தொடுத்தனர். இந்த நடவடிக்கை என்னை வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. போராட்டத்தை இராணுவத்தினர் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக நாம் தரையில்படுத்து எமது அகிம்சை வழிப் போராட்டத்தை வெளிக்காட்டினோம். அத்துடன் எமது மாணவர்கள் அமைதியாகச் சென்ற வேளை இந்த அடாவடித்தனம் நிகழ்ந்துள்ளது.

எனக்கு முன் சிரேஷ்ட விரிவுரையாளர் பேரின்பநாதன் குண்டடிபட்டு இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்டார். பல மாணவர்களும் காயமடைந்து வீழ்ந்தனர். இவற்றிற்கு மத்தியில் நான் எழுந்து நின்று நான்தான் துணைவேந்தர் என அறிமுகப்படுத்தி, மாணவர்களின் சாத்வீகப் போராட்டம் பற்றி எடுத்துக் கூறி மாணவர்களை அடிக்கவேண்டாம் என மன்றாட்டமாகக் கேட்டேன். ஆயினும் அவர்கள் தொடர்ந்து தாக்கினர்.

சிறிசற்குணராஜாவும் கஜேந்திரன் எம்.பியும் காயமடைந்த பேரின்பநாதனைக் கொண்டு செல்வதைக் கண்டேன்.

ஓட்டோவைத் தாக்கி சேதப்படுத்திய போது ஓட்டோ சொந்தக்காரர் ஏழை எனக் கூறி உடைக்கவேண்டாம் எனத் தடுத்தேன்.

மாணவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்பதற்காக மாணவர்களை திரும்பிப்போகும்படி கேட்டேன் பின்னர் மாணவர்கள் செல்ல நானும் மெதுவாக பல்கலைக்கழகத்தை நோக்கி நடந்தேன். ஆயினும் இராணுவத்தினர் பரமேஸ்வராச் சந்தியில் நின்று துப்பாக்கியை வளாகத்தை நோக்கிப் பிடித்தபடி நின்றனர். நான் இராணுவத்தினரிடம் திரும்பிச் சென்று மாணவர்கள் தான் திரும்பிச் செல்கிறார்கள் நீங்கள் ஏன் நிற்கிறீர்கள் எனக் கேட்டு இராணுவத்தை அனுப்பிய பின்னர்தான் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பினேன்.

பின்னர் மாணவர்கள் அகிம்சைப் போராட்டத்தை கைவிடுவோம் எனக் குமுறி எழுந்தனர். உங்கள் போராட்டங்களை பல்கலைக்கழக வளாகத்தினுள் செய்யுங்கள் என கூறினேன். மாணவர்கள் அமைதியாக பல்கலைக்கழகத்திற்கு சென்றுவிட்டனர்.

பின்னர் இவ்விடயம் தொடர்பாக எனது தலைமையில் கூட்டம் வைக்கப்பட்டது. இதன்படி மாணவர்கள் நாளை (இன்று) விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கவுள்ளனர் - என்றார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் துணைவேந்தர் தொடர்ந்து கூறியதாவது:-

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி சந்திரசிறியுடன் நான் நேற்றுமுன்தினம் தொடர்புகொண்டு எமது பல்கலைக்கழகச் சூழலில் இராணுவத்தினரைக் குறைக்கும்படி கோரினேன். ஆனால் அவர் என்னுடைய கைகள் கட்டப்பட்டுள்ளது எனவும் - நான் ஒன்றையும் செய்யமுடியாது. இது மேலிடத்தின் விடயம். இதற்கு என்னால் தீர்வு காணமுடியாது. இது அரசியல் விடயம் எனப் பதிலளித்திருந்தார் - என்றார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் சூசையானந்தன் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சி.விஜயரூபன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(ஒ-12-190)

# திட்டமிட்டபடி மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.20

தொடரும் ஸ்ரீலங்கா இராணுவ அராஜகத்தை நிறுத்தி, மக்கள் வாழ்விடங்களில் இருந்தும் கல்வி நிறுவனங்களுக்கு அண்மையில் இருந்தும் படையினர் உடன் வெளியேறி எமது சுதந்திரமான செயற்பாடுகளிற்கு வழிவிடவேண்டும் என்று கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் ஒன்று நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரைக் கையளிப்பதற்காக நேற்று முற்பகல் அமைதிப் பேரணியாகச் சென்ற பல்கலைக்கழக சமூகத்தினர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதன் பின்னர் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.பல்கலைக்கழத்தைச் சேர்ந்த 6 பேர் அடங்கிய குழுவினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் மகஜரைக் கையளித்தனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.பல்கலைக்கழக ஆசி ரியர் சங்கத்தின் தலைவர் சிவானந்தமூர்த்தி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலை வர் சி.விஜயரூபன், விவசாய மாணவர் ஒன் றியத்தின் தலைவர் எஸ்.குகானந்தன், மருத்துவபீட மாணவர் ஒன்றியச் செயலாளர் ரவீந்திரன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக நலச் சேவைகள் பிரிவு உதவிப்

(15ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ அராஜகத்தைக் கண்டித்து யாழ்.பல்கலை சமூகம் போராட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

இராணுவத்தின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து ஒட்டுமொத்த யாழ். பல்கலைக்கழக சமூகம் இன்று போராட்டத்தில் குதிக்கிறது.

யாழ்.குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழகம் நடத்திய அமைதிப் பேரணியின் போது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் இன்று முதல் விரிவுரைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவார்கள் என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மாணவர்களின் அமைதியான கற்றல் சூழலை ஏற்படுத்தும்படி கோரி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்க சாத்வீக வழியில் சென்ற பல்கலைக்கழக ஆசிரிய சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் ஆகியோர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமையை கண்டிப்பதுடன் இதனைக் கண்டித்து இன்றையதினம் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை - பல்கலைக்கழக சமூகத்தினர் மீது நேற்று படையினர் மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டிக்கும் முகமாக பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சகல ஊழியர்களையும் இன்று காலை ஒன்றுகூடுமாறு ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. ஊழியர் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்றுக்காலை 10 மணிக்கு மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேரணியை சிறிலங்கா இராணுவத்தினர் தமது அடாவடித்தனம் மூலம் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டபோது துணைவேந்தர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதைக் கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாகத் தீர்மானித்துள்ளோம். தயவு செய்து ஊழியர்கள் சகலரும் இராமநாதன் மண்டபத்துக்கு முன்பாக காலை 9 மணிக்கு ஒன்றுகூடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ-ஒ-6-12-13-190)

# கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக ஊடகவியலாளர்கள் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.பல்கலைக்கழகச் சமூகம் நேற்று நடத்திய அமைதிப் பேரணியின் போது செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களைத் தாக்கி அவர்களது தொழில் உபகரணங்களை சேதப்படுத்திய படையினரின் அராஜகத்தைக் கண்டித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக இன்று அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 11 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகம் முன்பாக இப்போராட்டம் இடம்பெறவுள்ளது.

இதுகுறித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்று பரமேஸ்வராச் சந்தியில் வைத்து உதயன், தினகரன், யாழ்.தினக்குரல், நமது ஈழநாடு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளின் செய்தியாளர்கள் இராணுவத்தினரால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களது தொழில் உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. தமிழ் ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் தாக்கியும் அச்சுறுத்தியும் அடிபணியவைத்து அதன் மூலம் உண்மைகளை மூடிமறைத்து விடலாம் என்று இலங்கை அரசும் அதன் படைகளும் எண்ணுவது நேற்று மீண்டும் ஒருமுறை அரங்கேறியுள்ளது. தமிழ் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் அரசுப் படைகளும் துணைக் குழுக்களும் நடத்தும் அராஜக நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முன்வருவதுடன் உண்மைநிலையை சர்வதேச சமூகத்துக்கு வெளிக்கொணர நடவடிக்கை எடுக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவிடம் வலியுறுத்தி இன்று அடையாளப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்தப் போராட்டத்தில் ஊடகத்துறை சார்ந்தோர் பிரதேச செய்தியாளர்கள் பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களைப் பங்கேற்குமாறு அழைக்கின்றோம் - என்றுள்ளது.

(ஒ-6-13)

# கடற்படை அச்சுறுத்தலின் மத்தியில் புங்குடுதீவு யுவதியின் இறுதிக்கிரியை

புங்குடுதீவு,டிசெ.20

புங்குடுதீவில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் இறுதிக்கிரியை படையினரின் அச்சுறுத்தலின் மத்தியில் நேற்று இடம்பெற்றது.

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி தர்சினி(வயது 20) கடந்த வெள்ளிக்கிழமை காணாமற்போயிருந்தார். அவரது சடலம் பின்னர் கடற்படை முகாம் அருகே உள்ள கிணற்றிலிருந்து மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று 1.30 மணியளவில் யுவதியின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து புங்குடுதீவுக்கு வாகனத்தில் உறவினர்களால் எடுத்துச்செல்லப்பட்டது. இதற்கிடையில் நேற்றுக்காலை முதல் கடற்படையினர் அங்கு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொதுமக்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினர் என்றும் கூறப்படுகிறது. கடற்படையினரின் இந்த அச்சுறுத்தல்களால் யுவதியின் இறுதிச் சடங்கிற்கு பாடை கட்டுவதற்காக கிழக்கூர் பகுதியில் இருந்து மடத்துவெளிக்கு வரவேண்டியவர்கள் வரமுடியவில்லை. இதனால் மருத்துவமனையில் இருந்து சடலத்தை எடுத்துவந்த வாகனத்திலேயே கேரதீவு மயானத்திற்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகப் பிரதிநிதிகள் யுவதியின் வீட்டில் விசாரணை நடத்தினர். (ஒ-ரி)

# கண்காணிப்புக் குழுவினரிடம் ஓட்டோ சங்கத்தினர் மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.20


படையினரின் தாக்குதலைக் கண்டித்து யாழ். ஓட்டோ சங்கத்தினரால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்று மகஜர் கையளிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் நேற்று நடத்திய அமைதிப் பேரணியில் ஒலிபரப்புத் தேவைக்கென இரு ஓட்டோக்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தன. பேரணி மீது தாக்குதல் நடத்திய படையினர் அந்த இரு ஓட்டோக்களையும் அடித்து நொறுக்கியதுடன், அவற்றின் சாரதிகளையும் தாக்கினர். அத்துடன் ஓட்டோக்களில் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளும் சேதமாக்கப்பட்டன.

இதனைக் கண்டித்து யாழ்.ஓட்டோ சங்கத்தினர் யாழ்.பஸ்நிலையத்திலிருந்து ஓட்டோக்களில் ஊர்வலமாகச் சென்று நேற்றுப் பிற்பகல் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் மகஜர் கையளித்தனர்.

(ஒ-7)





படையினரின் தாக்குதல்களைக் கண்டித்து யாழ்.ஓட்டோ சங்கத்தினர் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் நோக்கி ஓட்டோக்களில் பேரணியாகச் சென்று கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியிடம் மகஜர் கையளித்தபோது எடுக் கப்பட்ட படங்கள்

(படங்கள்: பிரபா)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## தமிழ்த் தேசியப் போராட்டத்தை நியாயப்படுத்தும் தாக்குதல்கள்

''ஊடக அலுவலகத்துக்குள் புகுந்து சோதனை, தலைநகரில் பணி முடிந்து திரும்பிக்கொண்டிருந்த தமிழ் ஊடகவியலாளர்களும், தமிழ் ஊடகப் பணியாளர்களும் 'கிரிமினல்கள்' போல பொலீஸாரால் நடத்தப்பட்டமை போன்றவை எல்லாம் அடுத்துவரும் வேளைகளில் தமிழ் ஊடகவியலாளர்கள் சந்திக்கப்போகின்ற - அவர்களுக்கு நேரப்போகின்ற - அனர்த்தங்களுக்குக் கட்டியம் கூறுவனவாக அமைந்திருக்கின்றன.''

- இப்படி நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அது அச்சானமை காய்வதற்குள் நாம் எழுதியது சரிதான் என்பதை நிரூபிக்கும் நிகழ்வுகள் வடக்கு யாழ்ப்பாணத்தில் நடந்தேறியிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழகப் பகுதியில் மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிய செய்தியைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் நையப்புடைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஊடகங்களின் வாய்களை மூடுவதன் மூலம் - பேனாக்கள் தாங்கிய ஐந்தாம் படையினரின் குரல்வளையை நசிப்பதன் வாயிலாக - தமிழ்த் தேசியத்தின் பேரெழுச்சியையும், அந்த எழுச்சியின் அடிநாதமாக அமையும் அதன் நியாயங்களையும் மூடி மறைத்து விடலாம் என ஆட்சியாளர்கள் நினைத்தால், அது வெறும் பகல் கனவாகவே முடியும் என்றும் -

ஊடக சுதந்திரத்துக்குத் தடைவிதிப்பது அழிவை வெற்றிலை வைத்து வரவேற்கும் வேலையன்றி வேறில்லை என்றும் -

நேற்று இப்பத்தியில் நாம் குறிப்பிட்டதை மீண்டும் வலியுறுத்திச் சுட்டிக்காட்டவேண்டிய நிலைவரம் ஏற்பட்டிருக்கின்றது.

யாழ். குடாநாட்டில் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட சவால் குறித்து பகிரங்க அறிக்கை வெளியிட்டுக் கண்டித்திருக்கும் சுயாதீன ஊடக இயக்கம், அந்த அறிக்கையில் ஒரு விடயத்தை மேலதிகமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

வடமாகாணத்திலிருந்து வெளிவரும் அனைத்து நாளிதழ்களுமே தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டையே தமது ஆசிரிய பீடக் கொள்கையாகக் கொண்டுள்ளன. அந்தத் தமிழ்த் தேசியமே இலங்கையின் வடக்கு - கிழக்கில் தனிநாடு கோருவதற்கான ஆயுதப் போராட்டத்துக்கு அடித்தளக் கொள்கைக் கோட்பாடாக உள்ளது என்றும் சுயாதீன ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

வடமாகாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் என்று மட்டுமல்ல, ஈழத் தமிழரின் நிலைப்பாட்டை ஒட்டி தமிழில் வரும் பெரும்பாலான பத்திரிகைகள் எல்லாம் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவான - நியாயமான - நிலைப்பாட்டையே பற்றி நிற்கின்றன என்பது இப்போதைய நிகழ்வுப் போக்குகளையும், செய்திகளையும் வாசிக்கும் சாதாரண ஒவ்வொருவரும் புரிந்துகொள்வர்.

தமிழ் ஊடகங்களைப்பொறுத்தவரை அவற்றுள் பெரும்பாலானவை தமிழ்த் தேசியத்தை ஆதரித்து, வலுப்படுத்தி, உறுதிப்படுத்தும் தமது வரலாற்றுக் கடமையை மறந்துவிடாமல் பணியாற்றுகின்றன என்பதே உண்மை.

தமிழ்த் தேசியத்தை ஆதரிப்பதன் காரணமாக - தமிழினத்தின் நியாயத்தை எடுத்துரைப்பதற்காக - தமிழ் ஊடகவியலாளர்களை ' பயங்கரவாதிகள்' என்ற கண்ணாடி கொண்டு பார்ப்பது கண்டிக்கப்படவேண்டும்.

ஊடகவியலாளர் அமைப்புகள் சுட்டிக்காட்டியிருப்பது போன்று இந்த யுத்த நிறுத்த காலத்திலேயே பத்திரிகையாளர்களின் பணிக்கு இவ்வளவு தூரம் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் நிலைமை ஆரோக்கியமான எதிர்காலம் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் ஊடகவியலாளர்களுக்கு வழங்கியுள்ள அடையாள அட்டையையே, அரசின் சட்ட, ஒழுங்குப் பாதுகாவலர்களான பொலீஸார் உதாசீனம் செய்து ஒதுக்கிவிட்டு, தமிழர் என்ற காரணத்துக்காக ஊடகவியலாளர் ஒருவரை இம்சைப்படுத்துகின்றனர். அந்த அடாவடித்தனத்தை, நொண்டிச்சாட்டுக் கூறி - பொருத்தமற்ற விளக்கம், வியாக்கியானம் அளித்து - அரசின் சட்ட, ஒழுங்குப் பாதுகாவல் அமைப்பின் தலைவரான பொலீஸ் மா அதிபர் நியாயப்படுத்துகின்றார்.

மறுபுறத்தில் இராணுவத்தினர் தமிழ் ஊடகவியலாளர் என்ற காரணத்துக்காக அவர்களை மதிக்காமல் கண்மண் தெரியாமல் தாக்குகின்றனர்.

இவை கருத்துச் சுதந்திரம், தகவல் சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களாக அர்த்தப்படுத்தப்பட்டு, சர்வதேச மட்டத்தில் கண்டிக் கப்படுவதோடு, ஊடக சுதந்திரம் குறித்து தமது 'மஹிந்த சிந்தனையில் அதிகம் பீற்றிக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கும் பெரும் அபகீர்த்தியையும், அகௌரவத்தையும் ஏற்படுத்துகின்றன. இவை ஒருபுறமிருக்க -

இவ்வாறு தமிழ் ஊடகவியலாளர்கள் தலைநகரிலும், தமது தாயகத்திலும் தமிழர்கள் என்ற காரணத்துக்காகச் சட்டத்தின் பாதுகாவலர்களாலேயே சட்ட விரோதமான முறையில் இலக்கு வைக்கப்படுவது, தமிழரின் தேசியப் போராட்டத்தையும், பிரிந்து செல்வதற்கான வழியில் அது முன்னேறுவதையும் நியாயப்படுத்துவதாகவே அமையும் என்பதையும் அரசின் தலைவர்கள் அறிந்து - உணர்ந்து - கொள்வது நல்லது.

# ஈழத் தமிழர்களின் எதிர்வினை பகிரங்க எழுச்சிகள் குறித்து சிங்களமும், சர்வதேச சமூகமும் செய்யவேண்டியது என்ன

## புலிகளின் முக்கியஸ்தர் பாலகுமாரன் விளக்குகிறார்

யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்களின் பகிரங்க எழுச்சியையடுத்து சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் செய்யவேண்டியது என்ன என்பது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் விளக்கியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை 'புலிகளின் குரல்' வானொலியில் இடம்பெற்ற அரசியல் அரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:-

இன்றைய காலகட்டத்தில் பல புதிய பரிணாமங்கள், மாற்றங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் எமது விடுதலைப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே அமைகின்றன.

### உடனடி எதிர்வினை

தமிழ் மக்கள் முன்னொரு போதும் தங்களுக்கு எதிராகச் செய்யப்படுகிற அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்வினை காட்டியது கிடையாது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் எங்களுடைய எதிர்வினை என்பது உடனடியாக காட்டப்படுகிறது.

உலகின் எந்த மூலையிலும் எங்களுக்கு எதிராக எதிரி செய்யக் கூடிய அனைத்துக் காரியங்களுக்குமான ஒரு எதிர்வினை நிகழ்த்துதல் என்பது இன்று தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டு வருகிறது.

ஜனநாயக வழிமுறையில் அல்லது அரசியல் இராஜதந்திர நடைமுறைகளில் அல்லது இராணுவ ரீதியில் அல்லது புலனாய்வுப் போரில் ஏற்படும் எதிர் காரியங்களுக்காக உடனடியாகப் பதில் கொடுக்கக்கூடிய நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம். இதுதான் நாம் கூறுகிற எதிர்வினை என்பது. இதனைப் புரிந்துகொள்ள முடியாததால் தான் எதிரியானவன் சிறுபிள்ளைத்தனமானவனாக நடக்கிறான்.

மஹிந்த பதவியேற்ற உடனே கிளிநொச்சி வந்து போகக்கூடிய அனுசரணையாளர்களுக்கு ஹெலிக்கொப்டர் வழங்குவதை நிறுத்தினார். இது சிறுபிள்ளைத்தனமான செயல் அல்லவா? இதுபோலவே அகாஷி போன்றவர்கள் வரக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்.

அகாஷியினது வருகை அல்லது வராமை ஒருபுறம் இருக்க ஜப்பானிய ஈடுபாடு தொடர்பாக அகாஷி தெரிவித்த கருத்துகள், மஹிந்தவின் பேச்சாளர் போல் அவர் செயற்படுகிறார் எனத் தெரிகிறது.

திடீரென்று எவருக்குமே தெரியாத மஹிந்தவின் தீர்வுத் திட்டம் பற்றிப் புகழ்ந்தமை. இந்தியத் தலையீடு இப்போது தேவையில்லை என்கிற வகையில் கருத்துக் கூறியமை எம்மை இவ்வாறு சிந்திக்க வைக்கின்றன.

### புதிய இராணுவத் தளபதி

இதேவேளை, புதிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா திறமையாளர்கள் எல்லாம் ஒளிந்திருந்தது போலவும், தான் அவர்களைக் கண்டுபிடித்தது போலவும் இராணுவத்தில் ஆளை மாற்றிக் கொண்டிருக்கிறார். முன்பு 'இத்தாவில்' சண்டையின்போது இவ்வாறு ஆளை மாற்றி மாற்றிப் பார்த்தவர்கள்தான் இவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.வி.பியின் மீள்வருகை என்று சொல்லக் கூடிய மாதிரி பெட்டிக்குள் கிடந்த பாம்பு மாதிரி திரும்ப பெட்டிக்குள்ளிருந்து வெளிவந்திருக்கிறார்கள். அவர்களுடைய செயற்பாடுகள் விசித்திரமான செயற்பாடுகள் ஆகும்.

தங்களால் செய்யமுடியாத செயல்களை யாரையேனும் கொண்டு செய்விப்பார்கள். புலிகளுடன் மோதுவதை மஹிந்தவின் ஊடாகவும், மக்களுக்கான விடயங்களில் மஹிந்தவுடன் இணைந்து தாம் மேற்கொண்டதுபோல் காட்டிக்கொள்வார்கள். இந்தத் தந்திரத்தை மஹிந்த அறிய மாட்டார்.

மஹிந்த இப்போது ஜே.வி.பியை கொஞ்சம் ஓரம்தள்ளி ஜாதிக ஹெல உறுமய போன்று தீவிரவாதக் குழுக்களை அருகில் வைத்து அரவணைத்துக்கொண்டு செயல்படுகிறார்கள் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படியான சூழலில் நாம் குறிப்பிடுகிற 'வினை' என்பது தென்தமிழீழம் பற்றியது.

### பொஸ்னியாவாக மாறும் தென் தமிழீழம்

தென் தமிழீழத்தை ஒரு துரும்புச் சீட்டாக அல்லது பொஸ்னியாபோல் ஒரு இரத்தக்களறியாக மாற்ற கருணா குழு என்ற முகமூடிக்கு அப்பால் பல காரியங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இந்நிலையில் தென் தமிழீழ மக்களின் தலையிலே இவர்கள் கொட்டுகிற தீப்பிழம்புகளை நாங்கள் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

தென்தமிழீழத்திலே மக்களுக்குச் செய்யப்பட்டிருக்கிற வதைகள் என்பது மனித குலத்திலே நாம் அறிய முடியாத வதைகளாகும். அவற்றை கேட்டால் நெஞ்சம் கனக்கும். இவை எல்லாவற்றையும் நாம் பதிவுசெய்து வைத்துள்ளோம். என்றைக்காவது ஒருநாள் உலகத்துக்கு நாம் இதை போட்டுக்காட்டுவோம். இப்படியான வினை ஒன்று சிங்களத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதைவிட முக்கியமானது அமைதிப்பேச்சு என்ற நாடகம்! பேச்சு நடத்த விடுதலைப் புலிகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கிறார். இதைக் கேட்டபோது அதிசயமாக இருக்கிறது. பேச்சுகளை ஆசிய மயமாக்க, ஜப்பானை இங்கே நுழைக்க, இந்தியாவை ஒரு தரப்பாகவாவது நுழைக்க மஹிந்த பாடுபடுகிறார்.

இந்தியாவை தனித்தரப்பாக்க மாற்ற மேற்கொண்ட முயற்சி தோற்றபின்பு உதவி வழங்கும் நாடுகளில் இந்தியாவைச் சேர்ப்பதற்காக கடைசி முயற்சியை மஹிந்த தற்போது மேற்கொள்ள உள்ளதாக கேள்விப்படுகிறோம்.

இந்த மாதிரியான அரசியல் வினைகளை இவர்கள் நடத்திக்கொண்டு இதற்கு மாற்றாக எங்களை நோக்கி ஒரு பாசக் கயிறாக பேச்சு என்ற துருப்பை அடிக்கிறார்கள். இதை எவ்வாறு நாங்கள் உள் வாங்கி அடிக்கவேண்டும் என்பது எங்களுக்குக் கைவந்த கலை என்பது உங்களுக்கு நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

### மக்கள் கிளர்ச்சி

அண்மையில் வெளிவந்த ஞாயிற்றுக்கிழமை ஏடு ஒன்றில் 'பனை வளர் நாட்டிலே மக்கள் கிளர்ச்சி' என்று ஒரு செய்தி எழுதியிருக்கிறார்கள். 'இண்டிபாதா' என்பது ஒரு அரபுச் சொல். பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் வினையாக வெளிவந்த சொல் இது.

இந்த அரபுச் சொல்லானது உலுக்குதல் அல்லது ஒரு அமைப்பை இல்லாது ஆக்குதல் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தச் சொல் மக்களுடைய எழுச்சி என்ற வகையிலே இப்போது பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறான 2 எழுச்சிகள் பலஸ்தீனத்தில் நடந்தது எனச் சொல்கிறார்கள். முதலாவது 1987முதல் 1993வரை ஒரு எழுச்சியாகவும் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னால் 2003 ஆம் ஆண்டு வரை ஒரு எழுச்சியாகவும் சொல்லப்படுகிறது.

1987களில் போராடுகிற விடுதலை இயக்கம் மக்களிடத்திலிருந்து வெளியேற்றப்பட்டு யாஸீர் அரபாத் பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்தபோது மக்கள் எழுச்சி நடை பெற்றது. 1993ஆம் ஆண்டு ஒஸ்லோ உடன்பாடு வரை அந்த எழுச்சி நீடித்தது. போர் நிறுத்த உடன்பாடு, ஒஸ்லோ உடன்பாடு வந்த பின்னால் 2000ஆம் ஆண்டளவில் அங்கே ஒரு நிகழ்வு நடந்தது. இந்த 2 எழுச்சிகளின் போது பாவிக்கப்பட்ட அதே சொற்கள் இன்று யாழ்ப்பாணத்திலே எங்களுடைய மக்களின் எழுச்சிக் கட்டத்திலும் பயன்படுத்தப்படுவதை எண்ணிப்பார்க்கும்போது மனம் நெகிழ்கிறது.

பலஸ்தீனத்தின் 2ஆவது எழுச்சியை ஒஸ்லோ போர் என்று அழைக்கின்றார்கள். அதுபோல் கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களை அமைதிக்காக பலி கொடுக்கப்பட்டவர்கள் - 'விக்டிம்ஸ்' 'ஓப் பீஸ்' என்று அழைக்கிறார்கள். இதற்குப் பின்னால் பாலஸ்தீனப் போராளிகள் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது.

இதேபோல் தற்போது யாழ்ப்பாணத்தில் 42 வீதமாக கடற்பரப்பை தன்வசம் வைத்து, 20 வீதமாக மக்கள் வாழக்கூடிய நிலப்பரப்பை கையகப்படுத்தி இருக்கிற இராணுவத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுகிறபோது இதேவிதமான கருத்துகள் வருகின்றன. எங்களுடைய போராட்டத்திலே ஒரு புதியதர மாற்றம் நடந்துள்ளது. எல்லாவற்றுக்குமான எதிர்வினை என்று இதைத்தான் சொல்கிறோம். அதுதான் எங்களுடைய மக்களின் போராட்டப் பங்களிப்பாகும். மிக நீண்டகாலமாக காத்திருந்து கையகப்படுத்தப்பட்ட ஒரு அற்புதப் போராட்டமாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

இது பல்வேறு வடிவங்களில் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அதனுடைய பரபரப்பு உலகம் முழுமைக்கும் இன்று எதிரொலிக்கிறது. கொழும்பு மற்றும் உலக செய்தி நிறுவனங்கள் எல்லாம் இது தொடர்பில் மிகத் தெளிவான செய்திகளைச் சொல்லிக்கொண்டு வருகின்றன.

கடந்த வாரம் கொழும்பின் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையிலும் கூட இதை முக்கிய செய்தியாகச் சொல்கிறார்கள். அதாவது மக்களின் எழுச்சியானது யாழ்ப்பாணத்திலே பல்வேறு வடிவங்களிலே வெளிப்படுகிறது என்கிறார்கள்.

மக்களுடைய எழுச்சியின் விளைவாக ஆயுத இயக்கம் தோன்றி அது ஒரு போராட்ட சக்தியாக மாறி அதனது இறுதிக் கால கட்டத்திலே மக்கள் கலந்துகொள்கிற அற்புதமான பரிணாம சமநிலை இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

### மக்கள் படை

'எல்லாளன் படை', 'உயர்பாதுகாப்பு வலயப் பாதுகாப்புப் படை', 'மாணவர்கள் அமைப்புகள்' என்று பல்வேறு தரப்பு மக்கள் தாங்களாகவே கிளர்ந்து எதிர்வினை புரிகிற வாய்ப்பு இன்று ஏற்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக பொங்கு தமிழ் நிகழ்ச்சி இருக்கின்றது என 'சண்டே ரைம்ஸ்' ஒப்புக்கொள்கிறது. எல்லா பத்திரிகைகளும் பொங்கு தமிழ் எழுச்சியினது விளைவாக இன்று தோன்றியுள்ள நிலைமைபற்றி இன்று ஆராய்கின்றன. இந்த எதிர்வினைகள் அனைத்தும் இராணுவ ரீதியான செயற்பாடாக மாறிக்கொண்டு வருகின்றன. பகிரங்கமான அறிவித்தலுக்கு ஊடாக இந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

''பாரதிதாசன் பாடியபடி பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு'' என்ற வரிக்கு ஏற்றாற்போல்பொங்கு தமிழின் விளைவாக தமிழ் மக்கள் பொங்கி எழுந்துள்ளனர்.

### ஆயுதப் பயிற்சி

தமிழ் மக்கள் இன்று ஆயுதப் பயிற்சியை தாங்களாக முன்வந்து பெற்றுக் கொள்கிறார்கள். இதுபோன்ற பல பயிற்சிக் கூடங்களுக்கு நான் நேரில் சென்று பார்த்திருக்கிறேன். மக்கள் தாங்களாக வேண்டுகோள் விடுத்து வலிந்து வற்புறுத்தித் தங்களுக்குப் பயிற்சி அளிக்கக் கோருகிறார்கள். அவர்களும் மிக அற்புதமாக பயிற்சி பெற்று தங்களை ஒடுக்கிய அதே ஆயுதத்தை தங்கள் கைகளிலே பெறுவதை மிகப் பெரிய சாதனையாக எண்ணிச் செயற்படுகின்றனர். இதைப் பார்க்கின்றபோது எங்களுடைய மக்களின் எழுச்சி இன்னொரு 'இண்டிபாதா'வாக உருவெடுத்து உலகை கிடுகிடுக்க வைக்கும் என்று நம்புகிறேன். இதற்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

### உதயவாக்கு

நான் மட்டுமன்றி எதிரியும் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்தவனே இறுதி வெற்றியை எளிதில் அடைகிறான்.

### நாளை

மார்கழி 6
புதன்கிழமை
21.12.2005
திதி: சஷ்டி
முழுவதும்
நட்சத்திரம் : மகம்
முன்னிரவு :10.07 வரை
சுபநேரம் : 04.54-06.24
ராகுகாலம் : 12.24-.01.54
(யாவும் பழைய நேரப்படி)

# வாகனத்தைக் கடத்திய நபர் பிடிபட்டதும் சுட்டுத் தற்கொலை

## புத்தளம் பகுதியில் சம்பவம்

கொழும்பு,டிசெ.20

புத்தளம் மாவட்டம், நுரைச்சோலைப் பகுதியில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனம் ஒன்றை மூவர் கொண்ட குழுவொன்று கடத்திச் சென்றபோது, அவர்களைத் தாம் கைதுசெய்ய முயன்றனர் எனவும், அதன் போது அவர்களில் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

சனிக்கிழமை பின்னிரவு நுரைச்சோலைப் பகுதியில் பெண் ஒருவர் உட்பட மூவர் வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்றுள்ளனர். கரம்பை என்ற பகுதியில் வைத்து வாகனச் சாரதியின் கைகள், கால்களைக் கட்டி புதர் ஒன்றுக்குள் அவரைத் தள்ளிவிட்டு குறித்த மூவரும் வாகனத்தைக் கடத்திச் சென்றுள்ளனர்.

ஒருவாறு கட்டுகளை அவிழ்த்த வாகனச்சாரதி பொலீஸுக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார். அதனை அடுத்து அநுராதபுரம் 17 ஆவது மைல் கல்லில் குறித்த வாகனத்தைப் பொலீஸார் மறித்துள்ளனர்.

வாகனத்தைச் சோதனையிட்ட தாங்கள் அவர்கள் மூவரையும் கைதுசெய்ய முயன்றபோது அவர்களில் ஒருவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்தார் எனப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவர் புத்தளம் புளியங்குளத்தைச் சேர்ந்த நீலவேணன் மீசலிங்கம் எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (க)

## அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர் பதில் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ். மாவட்டத்தில் அஞ்சல் அல்லது உப அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக்கான பதில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்பாணத்தில் இடம்பெறும்.

சிற்றூழியர் பதில் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைக் கடிதங்களை யாழ் பிரதேச அஞ்சல் அத்தியட்சகரால் சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது கேட்கப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்படுகின்றது.

அஞ்சல் அல்லது உபஅஞ்சல் அலுவலகங்களில் ஏற்கனவே கடைமையாற்றியவர்களுக்கு இந்த நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ–185)

## கண் பரிசோதனை முகாம்

சங்கானை,டிசெ.20

வட்டு.கிழக்கு, சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 4மணிவரை நிலையத்தில் கண் பரிசோதனை நடை பெறவுள்ளது. (எ-29-202)

## வீதித்திருத்தப் பணிகள் தாமதம்

அரியாலை,டிசெ. 20

நீர்வேலி தெற்கு வீதியைப் புனரமைப்பதற்குக் கற்கள் குவிக்கப்பட்டு தற்போது ஒரு மாத காலமாகியும் வீதியைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

சம்பந்தப்பட்ட வீதியைப் புனரமைப்பதற்கென வீதியின் ஓரமாகக் குவிக்கப்பட்டிருந்த கற்கள் சிதறிக் காணப்படுவதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குச் சிரமப்படுகின்றனர். (எ–17)

## செம்பியன்பற்று மாணவர் சிரமம்

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கென புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு ஒரு வருடமாகியும் இதுவரை உரியவர்களிடம் கையளிக்கப்படவில்லை.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவரின் பெற்றோர் அதிருப்தியடைந்துள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பலத்த அழிவைச் சந்தித்த இந்தப் பாடசாலை தற்போது பலத்த சேதமடைந்த பழைய கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது. இந்த நிலையில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டடம் கட்டட ஒப்பந்தகாரரால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படாமையினால் அதனைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-173)


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வாசுகி சிவநேசன் அவர்களின் அன்புத் தந்தை

**இராசலிங்கம் சொர்ணலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/தாவடி இ.த.க.பாடசாலை.

(44290)(32-14-17-24)


### மரண அறிவித்தல்



நாட்டுப்பற்றாளர்

**ஆறுமுகம் சிவசம்பு குணரத்தினம்**

(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு, உதவிப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாண இளைஞர் விவகார அமைச்சு, உதவிச் செயலாளர் - இலங்கை அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம், முன்னாள் உதவித் தலைவர் - இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம், சமாதான நீதிவான் அகில இலங்கை, நயினா தீவு தில்லைவெளி, பிடாரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் குளங்கரை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு குணரத்தினம் அவர்கள் 16.12.2005 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு-சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் - இரத்தினம்மாவின் மருமகனும் சிவனேசரத்தினம் (ரதி, ஓய்வு பெற்ற பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் பார்த்தீபன்(பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம், கொழும்பு), பிரதீபன் (விரிவுரையாளர், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்), சுகந்தீபன் (மருத்துவபீட மாணவன், யாழ்ப்பாணம்), தர்ஷிகா (மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஷ்யந்தி, யசீலா ஆகியோரின் அன்பு மாமனும் பழனிவேலு, பாக்கியலட்சுமி, சோதீஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடராசா, பரமசாமி, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பேராசிரியர் மகேஸ்வரன் (விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணம்), சுதந்திரேஸ்வரன், ஞானேஸ்வரன் (பொறியியலாளர், நியூசிலாந்து) இராஜேஸ்வரன் (பொறியியலாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், கொழும்பு), திருமதி பத்மனேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம்), திருமதி ஜெயபாலன்(ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), திருமதி சிவானந்தராசா (பொறியியலாளர், புருணை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் இன்று (20.12.2005) செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டு, நாளை (21.12.2005) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில்இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/1, குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தொ.பே.இல.: 021 222 9722

(சி/46860) (24-14-17)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.


Prepration Course for English medium Students
6, 7, 8, 9
அச்சடித்த பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
ஆசிரியர் -B.Ruban (B.B.A.)
ஆரம்பம்: 21.12.2005 - 4 p.m.
(44274) (24-14-17)
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

G.A.Q., B.A.
(யாழ்., பேராதனை)
Part - I மீட்டல்
A/L - 2006
Paper
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 21.12.2005 - 4p.m.
(44274) (24-14-17)
திகழ் கல்வி நிறுவனம்
இணுவில்.


### தவறிவிட்டது

எனது கையடக்கத் தொலைபேசி பொன்னாலைக்கும் திருநெல்வேலிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

சோ.சுந்தரலிங்கம்,
82, பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு.

(44293) (39)

### 4ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 09 - 1940 | 04 - 01 - 2002 |

**அமரர் இராமன் பரஞ்சோதி**

திதி: பஞ்சமி

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவு எம்நெஞ்சை
விட்டு என்றும் அகலாது.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

செல்வாபுரம்,
கரணவாய்.
(44286) (32-14-17-24)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 - 01 - 1926 | 20 - 11 - 2005 |

அமரர்

**இராமு கிருஷ்ணபிள்ளை**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் தியாக தீபமாய்
வாழ்ந்து எங்கள் நல்வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்து
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்புத் தெய்வம்
**இராமு கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (20.12.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இன்று இடம்பெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"செந்தூரம்"
திருவந்தோட்டம்,
கொற்றாவத்தை.

- குடும்பத்தினர்.

(சி/46860) (24-14-17)

### நெஞ்சை விட்டகலா நினைவலைகள்



அமரர்
**வல்லிபுரம் குமாரசாமி**
தோற்றம் 1938.02.12 மறைவு 02.04.1995

அமரர்
**குமாரசாமி நந்தினி**
தோற்றம் 01.02.1974 மறைவு 31.12.2004



அமரர்
**குமாரசாமி இராசம்மா**
தோற்றம் 1941.01.05 மறைவு 28.11.1994

அமரர்
**குமாரசாமி திருமுருகதாசன்**
தோற்றம் 01.03.1966 மறைவு 04.03.1971

*அன்னையுடன் தந்தையுடன் அன்புச் சோதரர்கள் - சென்று*
*ஆண்டு பல சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்*
*மீண்டு உதித்திடுங்கள் எம் வாழ்வு உதயமாக*
*அன்புள்ளங்கள் ஆத்மசாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.*

அமரர்களின் நினைவு நாளான இன்று (20.12.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி
(சிறுப்பிட்டி மனோன்மணி அம்பாள்ஆலயம் அருகில்).
(44285) (39/14/17/24)

**கு.திரவியானந்தன்**
(மகன்).

# "நான் ஒரு பேராசிரியன் என்று சிங்களத்தில் கத்தினேன்! அப்போதும் விடாது அடித்தனர்..."



## கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன் செவ்வி



யாழ்ப்பாணம்,டிசெ.20

"என்னை நோக்கி வந்த சிப்பாய்களைப் பார்த்து நான் ஒரு பேராசிரியன் என்று சிங்கள மொழியில் அவர்களுக்கு புரியும்படியாகக் கத்தினேன். அவர்கள் விடவில்லை. துப்பாக்கிப் பிடிகளால் என்னைத் தாக்கினார்கள்..."

தமக்கு நேர்ந்த கதியை இப்படி விவரித்தார் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்.

அமைதிப் பேரணியில் கலந்துகொண்ட பேராசிரியர் சிவச்சந்திரன் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். யாழ் ஆஸ்பத்திரி வார்ட்டில் தங்கியிருக்கும் அவரை 'உதயன்' செய்தியாளர் சந்தித்து சம்பவம் தொடர்பாகக் கேட்டார்.

பேராசிரியர் அப்போது கூறியதாவது:-

பேரணியில் நாங்கள் அமைதியாகவே சென்றுகொண்டிருந்தோம். பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் எங்களை வழிமறித்த படையினர் முன்னேற வேண்டாம் எனப் பணித்தனர். துப்பாக்கிகளை எம்மை நோக்கி நீட்டியவாறு தயார்நிலையில் நின்றனர். நாங்கள் அமைதியாக முன்னே நகர்ந்து கொண்டிருந்தபோது திடீரென எங்களை நோக்கிச் சுடத் தொடங்கினர். பேரணியில் வந்தோர் செய்வதறியாது தலைதெறிக்க சிதறி ஓடினர். பலர் கீழே விழுந்து படுத்தனர். தரையில் படுத்து பாதுகாப்புத் தேடிய மாணவர்களை சிப்பாய்கள் ஏறி மிதித்து தாக்கத் தொடங்கினர். துவக்குப்பிடியால் கண்டபடி தாக்கினர். அப்போது நான் மெல்ல எழுந்து "நாங்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். மாணவர்களை அடிக்கவேண்டாம்" என்று சிங்கள மொழியில் புரியும்படி கூறினேன். அதனைப் பொருட்படுத்தாது படையினர் என்னை நெருங்கி வந்து துப்பாக்கியால் கடுமையாகத் தாக்கத் தொடங்கினர். தாக்குதலால் என் உடல் முழுவதும் பலத்த வலி ஏற்பட்டது. ஒருவாறு அம்புலன்ஸ் வண்டி ஒன்றின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டேன்

- இப்படித் தெரிவித்தார் பேராசிரியர் சிவச்சந்திரன். (ஐ-12)

# எதிரே நின்ற இராணுவத்தினர் திடீரெனச் சுட்டனர்! தொடையில் சன்னம் பாய்ந்தது! தரையில் வீழ்ந்தேன்!

## படுகாயமடைந்த விரிவுரையாளர் உதயனுக்குத் தெரிவிப்பு




"எதிரே நின்றிருந்த படையினர் திடீரென எம்மை நோக்கிச் சுட்டனர். நான் தரையில் வீழ்ந்து படுத்தேன். தொடையில் குண்டு பாய்ந்து குருதி வெளியேறுவது தெரிந்தது."

நேற்று பரமேஸ்வராச் சந்தியில் படையினரின் சூட்டுக்கு இலக்கான பொருளியல் துறை விரிவுரையாளர் நல்லதம்பி பேரின்பநாதன் (வயது 56) மேற்கண்டவாறு 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தார். வலது கால் தொடையில் குண்டுபாய்ந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியின் 24 ஆம் வார்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கும் அவர் தனது திகில் அனுபவத்தை விவரித்தார்.

அவர் கூறியதாவது:-

வேட்டுக்கள் சரமாரியாகக் கேட்டபோது நான் தரையில் வீழ்ந்து படுத்துவிட்டேன். பலர் அங்கும் இங்கும் தாறுமாறாக -தலை தெறிக்க-ஓடிக்கொண்டிருந்தனர். ஓடியவர்களை படையினர் மறித்துத் தாக்கிக்கொண்டிருந்தனர். எனக்கு அருகே மேலும் பலர் வீழ்ந்து கிடந்தனர். ஒழுங்கைகள் ஊடாகப் பலாலி வீதிக்கு வந்துகுவிந்த படையினர் எதிர்ப்பட்டவர்களை எல்லாம் அடித்துத் துரத்திக்கொண்டிருந்தனர். நிலைமை படுமோசம் என்பதை உணர்ந்துகொண்ட நான் மெதுவாக எழுந்துசெல்ல முற்பட்டேன். முடியவில்லை. எனது தொடைப்பகுதியில் சன்னம்பாய்ந்திருந்தது; இரத்தம் பீறிட்டது. என்னை ஒரு சைக்கிளில் ஏற்றி உருட்டி வந்த மாணவர்கள் பின்னர் ஓட்டோ ஒன்றின் உதவியுடன் மருத்துவமனைக்கு கொண்டுவந்தனர்.

- இவ்வாறு தெரிவித்தார் விரிவுரையாளர் பேரின்பநாதன். (ஐ-12)



## நடைபாதை வியாபாரத்துக்கு முற்றாகத் தடை

எதிர்வரும் நத்தார், புதுவருட, பொங்கல் கொண்டாட்டங்களை முன்னிட்டு இடம்பெறவுள்ள தற்காலிக வியாபாரங்கள் அனைத்தும் முனீஸ்வரன் வீதியில் மாத்திரமே அனுமதிக்கப்படும்- என்று மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

யாழ்.நகரின் ஏனைய பகுதிகளில் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தும் சகல வகையான நடைபாதை வியாபாரங்கள் அனைத்தும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**படங்கள்: நேசன், பகீரதன்**

# படையினரின் அப்பட்டமான அடாவடித்தனம்: பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம், டிசெ. 20

பல்கலைக்கழகக் கல்விமான்கள் உட்பட மாணவர்கள் மீது நேற்று இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் அவர்களது அப்பட்டமான அடாவடித்தனத்தை வெட்ட வெளிச்சமாக எடுத்துக்காட்டுகின்றது.

பல்கலைக்கழக சமூகத்தின் அமைதிப் பேரணியை இராணுவம் நேற்று வன்முறை வழியில் அடக்கிய சம்பவத்தைக் கண்டித்து பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:

பல்கலைக்கழக சூழலில் ஸ்ரீலங்கா படையினரின் அண்மைக்கால நடவடிக்கைகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் ஊழியர்கள் ஆகியோரை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. பல்கலைக்கழகத்தைச் சுற்றி தொடர் சுற்று நடவடிக்கைகளும், சுடுகலனை சுடத் தயாரான நிலையில் வைத்து குறிபார்த்த வண்ணம் தமது முகங்களை இறுக வைத்திருப்பதும் சுமுக நிலையை ஏற்படுத்தக் கூடியதாகத் தோன்றவில்லை.

அந்த வகையில் பரமேஸ்வராச் சந்தியில் நேற்றுமுன்தினம் நடந்த சம்பவமும் அதனைக் கண்டித்து நேற்றுக் காலை 10 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஆரம்பமான அமைதிப் பேரணி திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வழிமறித்துக் கண்மூடித்தனமாகச் செய்த துப்பாக்கிப் பிரயோகமும் துப்பாக்கி, தடி மற்றும் வயர்களால் மிக மோசமாக மேற்கொண்ட தாக்குதலும் இராணுவத்தினரின் அடாவடித்தனத்தை வெட்டவெளிச்சமாக எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.


இன்று நடத்திய பாரதூரமான தாக்குதலில் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் காயங்களுக்கு உள்ளானதுடன் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்துள்ளதுடன் பீடாதிபதி ஒருவர் பலத்த தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி போருக்கான வலுவான தயாரிப்புகளை மேற்கொண்டபடி சமாதானப் பசப்பு வார்த்தைகளைப் பிரயோகிப்பதை எம்மால் இனம் காணமுடிகிறது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## தமிழ்செய்தித் தகவல் மையமும் கண்டனம்

நேற்றையதினம் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட நிகழ்வு மிகவும் பாரதூரமாகக் கண்டிக்கத்தக்க ஒரு செயலாகும்.

இதனை தமிழ் செய்தித் தகவல் மையம் வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்காலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடராமல் இருக்க சம்பந்தப்பட்டவர்களிடம் கோருகின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)







பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் நேற்று இடம்பெற்ற களேபரத்தின்போது பேரணியில் சென்றோரைத் தாக்கித் தடுத்து நிறுத்துவதற்காக ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் வீதி வழியே ஓடிச் செல்வதை முதல் படத்தில் காணலாம். தலையில் குண்டு பாய்ந்து படுகாயமடைந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத் தலைவர் காண்டீபன் ஆஸ்பத்திரிப் படுக்கையில் சிசிச்சைக்குட்படுத்தப்பட்டிருப்பதையும் காயமடைந்த முகாமைத் பீட மாணவர் ஒருவரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

சுன்னாகத்தை சேர்ந்த சி.ஜெகன் என்பவரது தேசிய அ. அட்டை (851984500V), விசேட அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் மருதனார்மடத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் என்ற முகவரியில் 0776720905 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (44266)

## வீடு வாடகைக்கு

163, பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள சகல வசதியுடைய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. NGO விரும்பத்தக்கது. தொடர்பு: 021-2222560.(44262)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 34 வயதுடைய, பரணி நட்சத்திரம் 5'9'' உயரமுடைய நியூசிலாந்தில் Computer B.Sc.படித்து ஆஸ்திரேலியா செல்லும் மணமகனிற்கு அழகிய, படித்த மணமகள் தேவை. மணமகன் விரைவில் யாழ்.வரவுள்ளார் தொடர்பு: விள.இல. 2769, மே/பா உதயன்.(44282)

## நவாலி தெற்கில் புதிய ச.சமூக நிலையம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

நவாலி தெற்குப் பகுதியில் கடந்த சனியன்று புதிய சனசமூக நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் தலைமையில் நவாலி தெற்கு கண்ணகை அம்மன் சனசமூக நிலையம் என்ற பெயரில் இந்த சனசமூக நிலையம் அமைக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக செல்லையா சந்திரன், செயலாளராக மூத்ததம்பி சுதாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஐ-185)

## கடற்றொழிலாளர் சமாசத்தின் நிர்வாகப் பணிக்கு நிதியுதவி

வடமராட்சி,டிசெ.20

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்துக்கு அதன் நிர்வாகப்பணிக்கென 'ஹிலாஸ்' நிறுவனம் 12 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியிலிருந்து சமாச அலுவலகத்துக்கென 46 ஆயிரம் ரூபா செலவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மிகுதிப் பணத்தில் எதிர்வரும் டிசெம்பர் வரையான 4 மாதங்களுக்கு ஊழியர்களுக்கான சம்பளப் பணம் வழங்கப்படும். எஞ்சிய பணத்தில் சமாசத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள மீன்பிடி உபகரண விற்பனை நிலையத்துக்குத் தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்படும் என்று கூறப்பட்டது. (எ-173)


### X' Mas & New Year Offer

அதிரடி விலைக்குறைப்பு
இன்றும் நாளையும் மட்டுமல்ல
டிசம்பர் 31 வரை மட்டும்

*Domain Registration 500/- Per Year*
*(.com/ .net /.org/.biz/.info)*
*WebHosting 1000/- for 100 MB / Year*



*2000/- for 250 MB /Year*
*3000/- for 500 MB /Year*
*5000/- for 1 GB /Year*

எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் Space 5 மடங்காக அதிகரிக்கப்படுகிறது

கிராம சேவகர்களுக்கான தமிழ் சொப்ட்வெயார் புறோகிறாம் ஒன்றை வடிவமைத்திருக்கின்றோம் ரூபா 8000 மட்டும்

நீங்கள் ஒரு வெப்டிசைனராக அல்லது கம்ப்யூட்டர் புறோக்கிராமராக ஆசையா?உங்கள் கனவு நனவாக...
- பிரத்தியேகமான முறையில்
- அமைதியான சூழலில்

ரூ4000 மட்டும் (40hrs No ad. fee)

கடைகள், புள்ளிவிபரம் சேர்ப்பவர்கள் தனியார் வைத்தியசாலைகள், அரச நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் போன்ற அனைத்து தரப்பினருக்குமான தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான புறோகிராம்கள் வடிவமைத்து தரப்படும்

**SPEED IT NET**
72/28 Panikkar Lane,Off Palaly Road
Thirunelvely,Jaffna
web: www.speeditnet.com


## அறிக்கை கோருகின்றார் ஊடகத்துறை அமைச்சர்

'தினக்குரல்' பத்திரிகையாளர் உட்பட அந்நிறுவனத்தின் மூன்று பேர் கைதுசெய்யப்பட்ட விடயம் தொடர்பில் அறிக்கையொன்றைத் தாம் கோரியிருக்கிறார் எனத் தகவல், ஊடகத்துறை அமைச்சர் அனுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார்.

வெள்ளவத்தையில் 'தினக்குரல்' பத்திரிகையாளர்கள் கைதுசெய்யப்பட்டமை குறித்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்த விவகாரம் தொடர்பில் முழுமையான விவரம் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. சற்று முன்னர்தான் இதனைக் கேள்விப்பட்டேன். எவ்வாறாயினும் முழு விவரங்களை அறிந்து அதற்கேற்றவாறான நடவடிக்கைகளை எடுக்க நான் தயார். அதற்காக இதுபற்றிய அறிக்கையொன்றைத் தருமாறு நான் எனது செயலாளரைக் கோரியிருக்கின்றேன். பத்திரிகையாளர்கள் மீதான இவ்வாறான செயற்பாடுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும். - என்று மேலும் கூறினார் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா. (ஐ-க)

## நவாலி வடக்கில் புதிய விவசாயிகள் சம்மேளனம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

நவாலி வடக்குப் பகுதிக்கு புதிய விவசாய சம்மேளனம் விரைவில் உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை உடுவில் கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக அலுவலர் சோ.சோதிநாதன் மேற்கொண்டுள்ளார்.

இதன் முன்னோடியாக விவசாயிகள் ஒருங் கிணைப்புக் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு நவாலி வடக்கு, சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் நவாலி வடக்கு விவசாயி கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நவாலி வடக்கு சனசமூக நிலைய தலைவர் சி.ஆனந்தர் கேட்டுள்ளார். (ஐ-185)


**கோபாலையரின்**
தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
**சேமமடு பொத்தகசாலை**
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
(சி/46667) கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோப்பாய் வலயம் ஆவரங்கால் சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை, ஆவரங்கால் மேற்கு இந்து இளைஞர் மன்றம், இந்து இளைஞர் வி.கழகம், விவேகானந்தா சனசமூக நிலையம், விவேகானந்தா முன்பள்ளி, சமுர்த்திச் சங்கம் ஆகியவற்றின் தலைவரும்,

ஞானவைரவர் தேவஸ்தான முன்னாள் உப தலைவரும், ஆவரங்கால் கிழக்கு அருள்மிகு கற்பகப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபைத் தலைவரும், அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தான உப செயலாளராகவும், உறுப்பினராகவும், லிங்கன் ம.ச.ச.நிலையம், எவரெஸ்ட் வி.க. செயலாளராகவும் உறுப்பினராகவும் அத்துடன் சமூகத்தொண்டனும், மக்கள் தொண்டனுமாகிய

**- செ.தவராஜசிங்கம்**

அவர்கள் யாழ் மாவட்ட நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து நியமனம் பெற்றமையையிட்டு அவரை சிறப்புற வாழ்த்தி அவரது சமூகப் பணிகள் மேலோங்க வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| செ.ரவீந்திரன் | [சுவிஸ்] | ந.றதீஸ்குமார் | [கண்ணன்] |
| த.தமிழேந்தி | [பிரான்ஸ்] | ந.ஜெபிதரன் | [கேசவன்] |
| ந.றமேஸ்குமார் | [பிரான்ஸ்] | க.கணபதிப்பிள்ளை | |
| த.விந்தகன் | [பிரான்ஸ்] | த.சிவனேஸ்வரி | |
| ந.றஞ்சிதகுமார் | [இத்தாலி] | த.திருமாலினி | |
| த.வினோஜன் | [திருக்கனி] | த.சிவறஜனி | (44233)(21.14.34) |

### மூன்றாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 01 – 04 – 1976



மறைவு 24 – 12 – 2002

**செல்வி மகேசன் அபுரா**

*திதி : அபரபக்கப் பஞ்சமி [20–12–2005]*

*மூன்றாண்டுகள் சென்றாலும்*
*உன்முகம் எம்மனத்திரையில்*
*ஓயாது நிழலாடி*
*ஊனையும் உயிரையும் உருக்குதம்மா!*
*வானுறையும் தெய்வமாய்*
*ஆனாலும் அபுராவே*
*உறவுகளின் உள்ளத்தில்*
*நிறைந்திருப்பாய் காலமெல்லாம்.*

மணற்பகுதி, புத்தூர். (44270)(21.17.34) நா.மகேசன் குடும்பம்.

### மரண அறிவித்தல்

**கணேசலிங்கம் தர்மபவானி**

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசிப்பவருமான கணேசலிங்கம் தர்மபவானி 18–12 –2005 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் புதல்வியும் கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும்(ஜேர்மனி), குணதீசன் (ஜேர்மனி), கௌரீசன் (இலங்கை), ஜெகதீசன்(ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயும். தர்மராணி, தர்மலதா, தர்மசுதா, தர்மமாலினி ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாட்டோலை, இளையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (44278) (21.17.34) தகவல்: கி.முருகானந்தம்.

## சமூர்த்தி முத் ரை நிவாரணம் சுன்ன ாகத்தில்

அரியாலை டிசெ. 20

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங் கம் கடந்த ஜூலை மாதத்திற்குரிய சமூர்த்தி நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருவதாக சங்கத்தலைவர் சி.குமரவேல் தெரி வித்தார்

சங்கத்தின் கிளைகள் ஊடாக விநியோகிக் கப்பட்டு வரும் இந்த நிவாரணப் பொருள் களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு சங்கத்தலைவர் கேட் டுள்ளார்.

(எ–17)

### சேவை நலன் பாராட்டு



**உயர்திரு. கதிரவேலு நடராசா**

(ஆசிரிய ஆலோசகர் - கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| நற்பணிச் சேவை | ஆசிரியராக | - | 16 வருடங்கள் |
| | ஆசிரிய ஆலோசகராக | - | 20 வருடங்கள் |
| | அரசபணியிலிருந்து ஓய்வு | - | 2005- 12-20 |

வலிகாமம் கல்வி வலயத்தில் கணித பாட ஆசிரிய ஆலோசகராகச் சேவையாற்றி இன்று அகவை அறுபதில் ஓய்வுபெறும் உயர்திரு. கதிரவேலு நடராசா அவர்களின் சேவையை நயந்து உளமார வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

புன்முறுவல் பூத்தமுகம் வனப்புறு புனித நெஞ்சம்
எண்ணிய போதெல்லாமினிக்குமி தயக் கனிவு
எளிதாக அணுக நல்ல எளிய பாங்கு
என்றும் பணிவு; பணிக்கான அர்ப்பணிப்பு
எவர்க்கு முற்ற ஐயந்திர்க்கும் அறிவு வங்கி
வலிகாம வலயத்தின் வான்மை வளம்
பதினாறு ஆண்டு கணித ஆசான் பயன்தரு
வள ஆலோசகனாக இரு தசாப்த பணி
வளமாகச் சேவை ஈந்த வள்ளல்
எங்கள் நடராசப் பெருந்தகை வாழி!
இமயமாயுயர் இதயங் கொண்ட
இனியனே! நீடு வாழி! வளம் பொங்க வாழி!

மருதனார்மடம். (44265) (21.14.34) **கணித வட்டம், வலிகாமம் கல்வி வலயம்.**

### 42ஸ்ரீ 2323 (இசுசு) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை 28-12-2005

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 42 ஸ்ரீ 2323ஆம் இலக்க பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியினை 19.12.2005ஆம் திகதியில் இருந்து 24.12.2005ஆம் திகதி வரை எமது காரியாலயத்திலும் 26.12.2005ஆம் திகதியில் இருந்து 27.12.2005ஆம் திகதி வரை கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்திலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 28.12.2005ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு பரந்தன் சங்கத்தில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

1. மீளளிப்பு முற்பணமாக ரூபா 1,000/-ஐச் செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.
2. தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித் தொகையில் 25%ஐ உடன் செலுத்துவதுடன் மிகுதிப் பணத்தினை மூன்று நாள்களுக்குள் செலுத்தி பாரவூர்தியினைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நாகதேவன்துறை வீதி,
வாடியடி, பூநகரி. (ச/46848) (24-11-13)

திரு.கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்.

### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 21–11 –2005 அன்று
சிவபதமடைந்த
திருமதி
**இராசையா ஞானகாம்பிகை**



தோற்றம் 05–10 –1935 மறைவு 21–11 –2005

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை [21.12.2005] புதன்கிழமை காலை 6 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் சபிண்டீகரண கிரியைகளும் நடைபெறவுள்ளது. அத் தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந் திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உபதபாற்கந்தோர்,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்.
(44070)(21.17.34)

# அமைதிப் பேரணி அடக்கப்பட்டபோது...





பேரணி ஏற்பாடு குறித்து காலையில் கைலாசபதி அரங்கில் அனைத்துப் பீட மாணவர் கூட்டம்







பேரணியில் துணைவேந்தர், பீடாதிபதி, துறைத் தலைவர்கள் மற்றும் மாணவர்கள்




அமைதிப் பேரணியின் முன்பாக எடுத்துச் செல்லப்பட்ட பதாதைகள்...







பல்கலைக்கழக முன்றிலில் அலை கடலெனத் திரண்ட மாணவர் சமுத்திரம்

படங்கள் : பிரபா, பகீரதன்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் திருவாளர்
அ.இரங்கநாதனின் அன்புத் தந்தை

## இராமலிங்கம் அம்பலவாணர்

அவர்கள் காலமான செய்தி அறிந்து அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

யா/அளவெட்டி வடக்கு
அ.மி.த.க.பாடசாலை.

- ஆசிரியர்கள்.

(44257)(42-14-17)



# மலிவு விற்பனை மலிவு விற்பனை

மாணவ மணிகளே!பாடசாலை அதிபர்களே!



புது ஆண்டையொட்டி 10% தொடக்கம் 50% வரை விசேட கழிவு வழங்கப்படுகின்றது.

எங்கள் ஸ்தாபனத்தில் சகல விதமான புத்தகங்கள், தர உள்ளீட்டுப் பொருள்கள், அலுவலக உபகரணங்கள், மாணவ பயன்பாட்டுப் பொருள்கள் உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக்கொள்ளலாம்.

*2006ஆம் ஆண்டுக்கான எங்கள் மலிவு விற்பனை தை மாத இறுதி வரை நடைபெறும்.*

எந்தப் பொருள்கள் ஆனாலும் தரமாகவும் உத்தரவாதத்துடன் பொருள்களை உங்கள் காலடியில் கிடைக்குமாறும் ஏற்பாடு செய்பவர்கள்.

46 வருடங்களாக இலங்கைத்தீவு எங்கிலும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி இலட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்.

எங்கள் ஸ்தாபனம் பணம் மட்டும் சேர்க்கும் நிறுவனம் அல்ல ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

Dec-10ஆம் திகதி முதல் Jan- 30ஆம் திகதிவரை சனிக்கிழமை முழு நாளும் ஞாயிறு பிற்பகல்3 மணி வரைக் கும் உங்களுக்காகத் திறந்திருக்கும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
இல: 212- 214, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். T.P.:021 222 5542 (C1/46712)


# 17 குழந்தைகளைப் பெற்றெடுத்த உக்ரேனியன் தம்பதி

சிக்ரமென்ரோ,டிசெ.20

அமெரிக்காவில் வாழும் உக்ரேனியன் தம்பதிகளுக்கு பதினேழு குழந்தைகள். பதினேழாவது குழந்தை டிசெம்பர் 7ஆம் திகதி பிறந்தது.

உக்ரேனில் பிறந்து இப்பொழுது அமெரிக்க வாசிகளாக வாழ்ந்துவரும் விளாடிமிர் செர்னென்கோ தம்பதிகளுக்கு திருமணமாகி முதல் ஆறு மாதங்கள் குழந்தையே உருவாகவில்லையாம். எனவே, இனி குழந்தையே பிறக்காது என்றுதான் நினைத்திருந்தார்கள்.

''இவ்வளவு பெரிய குடும்பத்துக்கு தலைவன் ஆவேன் என்று ஒருபோதும் நினைக்கவே இல்லை'' என்று கூறினார் விளாடிமிர் செர்னென்கோ. சாத்ரமென்டே தேவாலயத்தில் குழந்தையின் பிறப்பையொட்டி அவர்கள் பிரார்த்தனை வைபவத்தில் கலந்துகொண்டார்கள்.

ஒரு பாடசாலையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அதிகாரியாகப் பணிபுரியும் செரென்கோ, தன்குடும்பத்துடன் ஓர் ஏழு அறைகள் கொண்ட வீட்டில் வசித்து வருகின்றார். குடும்பச் செலவுகள் கொஞ்சம் கஷ்டமாகவிருந்தாலும் எங்கள் பிள்ளைகளை பாசத்தோடு பார்த்துக் கொள்கின்றோம் என்றார் திருமதி செரென்கோ.

உக்ரேனிலிருந்து ஏழு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவுக்கு வந்த அவர்களின் குடும்பம்தான் அமெரிக்காவிலேயே பெரும் அளவில் குழந்தைகளைக் கொண்ட குடும்பம் என்று கருதப்படுகின்றது.

(ப)

# புகையிலைச் செய்கை ஆரம்பக் கட்ட வேலை

கோப்பாய்,டிசெ.20

கோப்பாய், உரும்பிராய், நீர்வேலிப் பகுதி விவசாயிகள் புகையிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது அடிக்கடி ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றங்கள் தொடருமெனில் புகையிலைச் செய்கையைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

(எ-72)




அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

## பொதுச்சபைக் கூட்டம் பற்றிய அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் புதிய பரிபாலனசபை/நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான பொதுச்சபைக் கூட்டம் மார்கழி மாதம் 23ஆம் திகதி (07.01.2006) சனிக்கிழமை காலை 10 மணிக்கு (ப.நே.) ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சகல உறுப்புரிமையுடைய பொதுச்சபை அங்கத்தவர்களும் கூட்டத்திற்குத் தவறாது வருகைதந்து இப்புதிய பரிபாலன/நிர்வாக சபையைத் தெரிவுசெய்ய பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் எதுவித அறிவிப்பும் பொதுச்சபை அங்கத்தவர்களுக்கு விடுக்கப்படவில்லையாதலால் இதையே அறிவித்தலாகக் கவனத்தில் கொள்ளவும்.

தவளக்கிரி
20.12.2005 (44210)(21-14-17-42)

ஆலய பரிபாலன/நிர்வாக சபை.



# கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும்
விளையாட்டுத்துறையில் எமக்கு
ஆலோசகராகவும் கடமையாற்றிய

## கந்தையா கிருஷ்ணன்

(B.Sc. Dip.in Edu.,FIFA)

அவர்களின் மறைவையொட்டி துயருறும் நாம், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(சி/46855)(42-14-17)



# கண்ணீர் அஞ்சலி



எமது சக ஊழியரான
செல்வி தர்ஷிகாவின் அன்புத் தந்தை

## ஏ.எஸ்.குணரத்தினம்

அவர்கள் அமரராகிய செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் அன்பர்களுக்கும் ஆறுதல் கூறி அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
மக்கள் வங்கி பிரதான வீதிக் கிளை
மற்றும் உரும்பிராய் நீடித்த கருமபீடம்.

(44255)(42.14.17)



# ஓராண்டு மறைந்த தீப ஒளி



அமரர்
## தம்பிப்பிள்ளை தவராஜா
(முன்னாள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்)

மலர்வு
30-12-1948

உதிர்வு
01-12-2004

அன்பாக எமையெல்லாம் ஆதரித்த குலவிளக்கே!
ஆண்டொன்று கடந்து விட்டது ஐயா!
என்று ஆற்றும் இதயம் எமக்கில்லை!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆலமரமாய் நீர் இருந்தீர்
அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்
ஆலமரமும் சாய்ந்தது ஆனந்தமும் பறிபோனது
தீராத வேதனையால் தினம் துடிக்கின்றோம்
உமது கள்ளங் கபடமற்ற புன்சிரிப்பைக்
காணத் துடிக்கின்றோம்!
ஏன் எமை விட்டு எட்டாத தூரம் சென்றீர்?
உமது திருமுகத்தை இனி எப்போ காண்போமென
ஏங்கி மனம் துடிக்குதையா!

உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பருத்தித்துறை. (44248)(52) குடும்பத்தினர்.

## ஆங்கிலக் கல்வியைச் சாட்டாக வைத்து

# சமயம், மொழி மறுதலிக்கப்படுவதையே கஷ்டத்துக்கு மத்தியில் நாவலர் எதிர்த்தார்

ஆங்கிலக் கல்வியை நாவலர் எதிர்க்க வில்லை. அதைச் சாட்டாக வைத்து எமது மொழி, சமயம் மறுதலிக்கப்படுவதையே எதிர்த்தார்.

நாவலர் வாழ்ந்த காலம் தமிழகத்திலும் ஈழத்திலும் வெள்ளைக்காரருடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். ஏறக்குறைய 450 ஆண்டுகள் நாங்கள் பிறநாட்டவர்களுக்கு அடிமைகளாக இருந்தோம். அவர்களது ஆட்சியின்போது பல இன்னல்களை அனுபவித்தோம். எங்களது சமயம், கல்வி, பண்பாடுகள் பல சோதனைகளுக்கு உள்ளாகியிருந்தன. இந்தக் கஷ்டங்களின் மத்தியில் தான் நாவலர் வாழ்ந்து கொண்டிருந்தார்.

- இவ்வாறு பேராசிரியர் அ.சண்முகதாஸ் கூறினார். நாவலர் குருபூசையை முன்னிட்டு நல் லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் உரை நிகழ்த்தினார். துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பேராசிரியர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கஷ்டமான சூழலில் வெள்ளைக்கார அரசு செய்த கொடுமைகளின் மத்தியில் துணிந்து நின்று சில நல்ல காரியங்களை நாவலரைப் போன்றவர்கள் செய்திருக்கின்றார்கள்.

சமய வாழ்வை மேற்கொள்ள ஊக்கமளிக்க வேண்டிய நிலை அன்று இருந்தது. இப்படித் துன்புற்று எமது வாழ்க்கை கீழிறங்கிச் சென்றுகொண்டிருந்த நிலையில், அதனைச் சீராக்கி முறையாக வாழ வழிகாட்ட வேண்டிய தேவை இருந்தது. இதனால்தான் நாவலர் தமது சாதனைகள், போதனைகள் செய்து எமக்கு உதவினார்.

ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட போது அதனால் ஏற்படும் நன்மையை நாவலரும் மறுக்கவில்லை. கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களை மறக்கமுடியாது. ஆனால், ஆங்கிலக் கல்வியைச் சாட்டாக வைத்து எமது மொழியை, சமயத்தை மறுதலிக்கின்ற நிலை ஏற்பட்டபோது தான் அதற்கு எதிராக நாவலர் பெருமான் போர்க்கொடி எந்த வேண்டியதாயிற்று. ஆங்கிலக் கல்விக்கு நிகராக சைவசமயக் கல்வியைக் கற்பிக்க என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அவர் செய்ய முனைந்தார்.

தமிழை, இலக்கியத்தைப் பேணவேண்டிய தேவை இருந்தது. இவற்றிற்கு நீண்ட இலக்கியப் பாரம்பரியம், செம்மொழி பாரம்பரியம் இருப்பது மறுக்கமுடியாது. இதேவேளை, எமது மொழிபற்றிப் பிறர் அறியாதிருக்கும் பொருட்டு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இன்றும் கூட அந்த நிலை உண்டு.

தமிழ்மொழி வரலாற்றில் உயர்ந்த நிலையைக் கண்டு வெள்ளையர்கள் சீற்றமடைந்ததுண்டு. சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு வழிகாட்டிய ஆறுமுகநாவலர் இன்றேல் எமது பழைய இலக்கியங்களையும் நாம் இழந்திருக்க வேண்டி ஏற்பட்டிருக்கும். கலித்தொகை, புறநானூறு போன்றவை வெளியில் கொண்டு வரப்பட்டபோது ஆச்சரியப்படாதவர்கள் இல்லை. பாரதி யாரே ஆச்சாரியப்பட்டார். இந்த இலக்கியங்களை மீட்டுத்தரும் பணியில் சி.வை. தாமோதரம்பிள்ளை ஈடுபடக் காரண மானவர் நாவலரே. அவர் ஒரு நல்ல உரை நடை எப்படி எழுதப்படவேண்டும் என்பதையும் எமக்கு எடுத்துக் காட்டினார்.



சமயம், மொழி எனப் பணியாற்றும் வேளையில் சமூகத்தையும் மறக்க முடியாது. அதைக் கூட அது எவ்வாறு செய்யப்பட வேண்டும் எனவும் உணர்த்தினார்.

கஞ்சித்தொட்டிச் சங்கம் அமைக்க வழி காட்டியபோது பலரும் அதுகுறித்து சிலாகித்துப் பேசினார்கள். அந்தவகையில் ஒரு பெரிய சமூகச் சேவையைச் செய்தார்.

நாவலர் இறைபதமடைந்த பின் சேர் பொ. இராமநாதன் 1884இல் சட்டசபை யில் பேசிய போது -

1956இற்குப் பின் எங்கள் நாட்டில் பௌத்த மேம்பாடு தீவிரப்படுத்தவும் அதற்கேற்ப எல்லாவகையான முயற்சிகளை அரசும் தனியார் துறையும் மேற்கொண்டன. சமய போதனைகளை முன்வைக்க சங்கங்கள் அமைத்தது. பிறநாடுகளின் உதவிகள் பெறப்பட்டன. அநாகரிக தர்மபாலாவின் பெயர் பிரபல்யம் பெற்றது.

பௌத்த சாஸ்தி ரத்தைப் பாதுகாக் கவும் புத்தசாசனத் தைப் பேணவும் அவர் செய்த தொண்டுகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள் இந்துக்கள் மத்தியில் அநாகரிக தர்மபாலவைப் போன்று யாரும் இருந்தார்களா என்ற கேள்வி எழுந்த போது எல்லோருமே ஏகோபித்த முறையில் நாவலரை எடுத்துக் கூறினார்கள்.

யார் இதனைக் கூறினார்கள் என்றால் வழக்கமாக இந்துசமய மரபுவழியில் வந்த சைவர்களல்லர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். கம்யூனிஸ்டுக்கள், மாக்சியவாதிககள் தான் எடுத்துக் கூறினார்கள். நாவலரை ஒரு தேசியவாதியாக அனாகரிக தர்மபாலரைப் போன்று சொல்லக் கூடிய ஒருவராக எடுத்துக் காட்டினார்கள். கல்வி, சமய, சமூக நோக்கில்- உலகியல் நோக்கில்- மொழியியல் நோக்கில்- அவர் ஒரு தேசியவாதியாகவே கருதப்பட்டார். அதன் பின்னரே நாவலர் பெருமானுக்கு சிலைசெய்து கொழும்பில் எடுத்துவரப்பட்டது.

நாவலர் காட்டிய நன்னெறிதான் இன்றும் சைவமும் தமிழும் தளைத்தோங்கி வாழ்கின்றன என்றால் மிகையில்லை.- என்றார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

(ப-11)




# திண்மக் கழிவுகள் முறையாக அகற்றப்படாததினால் வரும் ஆபத்து

## பயிற்சிப் பட்டறையில் விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.மாவட்டத்தில் முறையற்ற திண்மக் கழிவு பிரயோகத்தினால் கடலில் உள்ள மீனினம் அழிகிறது. மக்களின் உயிர்களைக் காவுகொள் ளக்கூடிய நுளம்புகளும் பெருமளவில் பெருக்கெடுத்துள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீட பேராசிரியருமான வி.கே. கணேசலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

தெற்காசிய இடைநிலை தொழில்நுட்ப அபிவிருத்திக் குழுவின் ஐ.ரி.டி.ஜி திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்ட அலுவலர் எஸ்.சி.கீதன் தலைமையில் பயிற்சி பட்டறை கீறீன் ஹோட்டலில் இடம்பெற்றது.


இதில் முன்னாள் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில், திண்மக்கழிவுகளால் யாழ்.மாவட்டம் நிரம்பி வழிகிறது. இதற்கான நடவடிக்கைகளில் இன்னும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் விழிப்படையவில்லை. வீடுகளில் புதைக்கப்பட வேண்டிய கழிவுகளும் வீதிக்கு வந்துவிட்டன. கழிவுகளால் நீர் நிலைகள் மாசடைகின்றன.

பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பொலித்தீன் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இங்கு தடை செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பது போலத் தெரிகிறது. இத்திட்டம் இன்னும் முழுமை பெறவில்லை.

இன்று ஐ.ரி.டி.ஜி மூலம் உள்ளூராட்சி சபை அதிகாரிகளுக்கும் பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் நடத்தப்படும் மாநாட்டின் ஊடாக பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதனையே நான் வரவேற்கின்றேன் என்றார் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்.

தொடர்ந்து திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்ட முகாமையாளர் வருண ரத்ன பாரதி பேசுகையில் -

எமது திட்டத்தின் நோக்கம் வறுமை ஒழிப்பு, திண்மக்கழிவுகளால் சூழலுக்கு ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளுக்கான ஆலோசனை வழங்குதல் ஆகும்.



அத்துடன், திண்மக்கழிவு அகற்றுவதற்கான சிறியளவிலான இயந்திர சாதனங்களையும் அதற்கான ஆலோசனைகளையும் பிரச்சினைப்படும் சபைகளுக்கு வழங்கி உதவுவோம் என்றார்.

தொடர்ந்து தெற்காசிய ஐ.ரி.டி.ஜி (ITDG) திட்ட ஆலாசக நிபுணர் மகிந்த விமரவீர கருத் துத் தெரிவிக்கையில் -

நாளுக்கு நாள் சனத் தொகை அதிகரிக்கிறது. அதேயளவுக்கு திண்மக்கழிவுகளும் அதிகரிக் கின்றன.

ஆனால், இதற்கான மாற்று ஏற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன.

திண்மக்கழிவு முகாமைத்துவ ஏற்பாடுகளின் கீழ் உள்ளூராட்சி சபைகள் முன்னுதாரணமாக முழுமூச்சுடன் பங்காற்றினால் தான் சூழலுக்கு எதிர்காலத்தில் ஏற்படப்போகும் பாரிய பிரச்சினைகளை ஓரளவு குறைக்கலாம். - என்றார்.

(ப-185)

# சமாதானம், சாந்தி என்ற சொற்கள் இறைசக்தியோடு சம்பந்தப்பட்டவை.

## வேறு துறைகளில் பயன்படுத்தப்படுவது பற்றிக் கவலை

கொழும்புத்துறை,டிசெ.20

சமாதானம், சாந்தி என்பது அர்த்தங்கள் நிறைந்த மனிதவாழ்வை மேம்படுத்தும் ஓர் ஆன்மிகம் சார்ந்த சொற்பதமாகும். இன்று எமது நாட்டில் உட்பட வேறு துறைகளில் லாபங்களுக்காக இப்புனித சொற்கள் பாவிக்கப்பட்டு கொச்சைப் படுத்தப்படுகின்றன. இவற்றைத்தர வல்லது இறைசக்தி ஒன்றே. அந்த இறைஒளி எம் உள்ளத்தில் உதிக்கவேண்டும்.

கொழும்புத்துறை புனித வளனார் குருமடத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அமலமரித் தியாகிகளின் மாகாண முதல்வர் அருட்திரு. எஸ்.செல்வரட்ணம் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

குருமட அதிபர் எட்வின் வசந்தராஜா அடிகள் தலைமையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் அருட்தந்தை மேலும் உரையாற்றுகையில்:-

சமாதானம் அகத்தில் இருந்து வரவேண்டும். புறத்தில் மட்டும் இதை உச்சரிப்பதால் பயனேதுமில்லை. சமாதானம் என்பது தனக்குள்ளும் பிறருடனும் முரண்பாடுகள் இன்றி வாழும்போது தான் வலுவடையும்.

இயேசு கொண்டுவந்த விடுதலை, சமாதானம் எங்களுள் தங்கவேண்டுமெனில், எம்மை அதற்கு இசைவாக உருவாக்கம் செய்ய வேண்டும். அமைதி, சாந்தி, சமாதானம் என்பன உருவாக்கி அதைப் பகிர்ந்து வாழும் போது இறைவன் அனைவருடனும் தங்கி வாழ்வான். எம் இதயங்களில் பாலக இயேசுவின் ஒளிவீசும். நாடும் வீடும் சுபீட்சமடையும் - என்று தெரிவித்தார்.

புனித வளனார் குருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 35 வருடங்கள் நிறைவுறும் இவ்வேளையில், அதன் ஸ்தாபகரான காலஞ்சென்ற அருட்திரு.அதிரியான் யோசேப் அடிகளின் திருவுருவப்படம் அரங்க மண்டபத்தில் அமலமரித் தியாகிகளின் குருமட அதிபர் அருட்திரு.யேசுதாசன் அடிகளாரால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

போட்டிகளில் வெற்றிபெற்ற குருமாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. 'விடியலின் சங்கம் ' என்னும் நாடகம் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.

(ப-30)

# மாணவரின் ஒழுக்கச் செயற்பாட்டுக்கும் பாடசாலைகள் உதவவேண்டும்

குருநகர்,டிசெ.20

பாடசாலையானது மாணவனுக்கு சாதாரணமாக அறிவை மட்டும் கொடுப்பதுடன் நின்று விடாமல் மாணவனுடைய ஒழுக்கச் செயற்பாடுகளுக்கும் அறவாழ்க்கைக்கும் உதவி செய்வதாக அமையவேண்டும்.

யாழ்.சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போது யாழ்.மறைக்கல்வி நடு நிலைய இயக்குநர் வண.பிதா ஜோசப் ஜோண் மௌலிஸ் அடிகளார் மேற்கூறியவாறு தெரிவித்தார்.

யாழ்.சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் யூ.சகாயராஜா, குருநகர் சிறகுவலை கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.கிறிஸ்துராஜா, குருநகர் இழுவைறால் மடிச் சங்கத் தலைவர் பி.ஏ.கிறேஷியன் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரை நிகழ்த்திய முதன்மை விருந்தினர் வண.பிதா ஜோ.ஜோ.மௌலிஸ் அடிகளார் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு சமூகம் முன்னேற வேண்டும் என்றால் அதில் இரண்டு முக்கியமான விடயங்கள் நடக்கவேண்டும். முதலாவது, கல்வி சரிவரக் கொடுக்கப்படவேண்டும். அடுத்ததாக, அச்சமூகத்தில் ஒத்துழைப்பு, ஒற்றுமை என்பன இருக்கவேண்டும். கல்வியைப் பொறுத்த மட்டில் அண்மைக் காலத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளானது பல சிரமங்களுக்குள்ளே - சவால்களுக்குள்ளே- இருக்கின்ற வேளையிலும் இப்பாடசாலையானது கல்வியை முன்னேற்ற பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதையிட்டு நான் மகிழ்சியடைகிறேன். பாடசாலைகளிலிருந்து கல்விமான்களை மட்டுமல்லாது சிறந்த ஒழுக்கசீலர்களை, சமூகசேவையாளர்களை உருவாக்க வேண்டும். இதுதான் பாடசாலை கொடுக்கின்ற பங்களிப்பாக இருக்கவேண்டும்.

எமது சமூகமானது பல்வேறுவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு போகும்போது - பல சீரழிவுகளுக்குள்ளே அகப்பட்டு நிற்கின்றபோது - அச்சுறுத்தலும் போரும் இன்னும் பல்வேறு விதமான சீர்குலைவுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது - இந்தப் பாடசாலை எடுக்கின்ற ஒவ்வொரு முயற்சியும் இந்த சமூகத்துக்கு மிகவும் பயன்தரும் சக்தியாக இருக்கவேண்டும் என்று கூறினார்.(ப-51)

# அமைதிப் பேரணி அடக்கப்பட்டபோது...




பல்கலைக்கழக முன்றிலிருந்து பேரணி புறப்படுகிறது.



படையினரின் அடாவடித் தனத்தைக் கண்டிக்கும் பதாதைகளுடன் மாணவர்கள்...




கறுப்புத்துணியால் முகத்தை மறைத்துக்கொண்டு பேரணியைத் தடுக்க ஆயத்தமாக நின்ற படையினர்

படங்கள் : பிரபா, பகீரதன்




படையினரால் அடித்து நொறுக்கப்பட்ட ஓட்டோக்கள்

# சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறைகள் அடுத்த ஆண்டில் இறுக்கமாக அமுலாகும்

## தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகம் அறிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.20

தமிழீழ சுகாதார சேவைகளின் சுற்றுச் சூழல் பிரிவினரால் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் சுற்றாடல் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் அடுத்த ஆண்டு முதல் முடுக்கி விடப்படும். குறிப்பாக வியாபார நிலைய சூழலிலும் மேற்படி பாதுகாப்பு நடைமுறைகள் தீவிரப்படுத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழீழ சுகாதார சேவை நடுவப் பணியகம்.

இதுதொடர்பாக தமிழீழ சுகாதார சேவைகளின் சுற்றுச்சூழல் பிரிவு, பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அந்தச் செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழர் தாயகப்பிரதேசம் எங்கும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பாகப் பேணிக்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். நவீன நகரமயமாக்கல் திட்டங்களும் அதனுடன் இணைந்த தொழில் நுட்பத் திறன்களும் எமது சுற்றாடற் சுகாதாரத்துக்குப் பாதிப்பையேற்படுத்துகின்றன.

அத்துடன், எமது சுற்றாடலைக் கவனிக்காத செயற்பாடுகளும் நிலம், நீர், வளி மாசடைவதற்குக் காரணமாக அமைந்து சூழலின் சமநிலையில் பாதிப்பையேற்படுத்துகின்றன.

எனவே, சுற்றுச்சூழல் பாதிப்பைக் கவனத்திற் கொண்டு அடுத்த ஆண்டிலிருந்து தமிழீழ சுகாதார சேவைகளின் சுற்றுச்சூழல் பிரிவினரால் சுற்றாடற் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை வியாபார நிலையங்களிற்கும் நடைமுறைப்படுத்தும் செயற்பாடு முடுக்கி விடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுற்றாடற்சுகாதார மேம்பாட்டுக்குக் கீழ்வரும் நடைமுறைகளைக் கவனத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

❖ நிலம், நீர் மாசடையக்கூடியவகையில் கழிவுநீர் என்பவற்றை இறுதியகற்றாது இறுதியகற்றலுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலும் நீர்த்தொட்டிகள், நீர் உறிஞ்சு குழிகளிலும் இறுதியகற்றப்படவேண்டும்.

❖ தூய்மிப்பகங்கள் (சேவீஸ் ஸ்ரேசன்), வாகன சீர்களங்கள் ஆகியவற்றின் கழிவுநீர், ஒயில் கலந்த கழிவுநீர், ஏனைய இரசாயனக் கழிவுகளைப் பாதுகாப்பாக செயன்முறை ரீதியான குழிகளில் இறுதியகற்றல் புறச்சூழலுடன்தொடர்புபட்டு இறுதியகற்றும்வரை தவிர்க்கப்படவேண்டும்.

❖ பழைய வாகன உதிரிகளையும், வாகன சீர்களப்பொருள்களையும் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் இறுதியகற்றப்பட வேண்டும்.

❖ சிகையலங்கார நிலையங்களின் மயிர்க் கழிவுகள் பிரதேச சபையால் இறுதியகற்றல் பிரதேசங்களில் இறுதியகற்றப்படவேண்டும்.

❖ அரிசியாலைகளில் உமி, கழிவு நீர் என்பன காற்றுடன் வெளியுடன் தொடர்புபடாத வகையில் அகற்றப்படவேண்டும்.

❖ மனித மலக்கழிவுகள் ஒதுக்கப்பட்ட இறுதியகற்றல் இடங்களில் மாத்திரம் இறுதியகற்றப்படவேண்டும்.

❖ சலவைத் தொழிலாளர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் சலவை தூய்மைப்படுத்தவேண்டும். பிரதான வாய்க்கால்கள், நன்னீர்க்குளங்களில் சலவை செய்தல் தவிர்க்கப்படவேண்டும்.

❖ பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் நிலம், நீர் நிலைகளில் சேருவதைத் தவிர்த்து இறுதியகற்றல் பிரதேசத்தில் இறுதியகற்றல் வேண்டும். சுற்றாடலில் எரிப்பதைத் தவிர்க்க வேண்டும்

❖ நீர் தேங்கும் குழிகள், மண் அகழும் குழிகளும் சுற்றாடலில் நோய்க்கிருமி காவிப் பெருக்கமின்றி பேணப்படவேண்டும்.

❖ உணவகங்கள், தங்கு விடுதிகள்ஆகியவற்றின் கழிவுநீர் கிருமியழிப்புதொட்டியில் இறுதியகற்றப்படவேண்டும்.

சுற்றாடலில் திண்மக்கழிவுகள் தேக்கமடைவதால் விஷ ஜந்துக்கள்பெருக்கமடைகின்றன. எனவே, திண்மக் கழிவுகள் சுற்றாடலில் தேங்காதவாறு பேணவேண்டும்.-என்று அதில் உள்ளது. (எ-6)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவருக்கு 'ஒக்ஸ்போட்' அகராதி

புதுக்குடியிருப்பு,டிசெ.20

புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஏழு மாணவர்களுக்கு முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கிளை'ஒக்ஸ்போட்' ஆங்கில அகராதிகளை வழங்கியுள்ளது.

இதேவேளை- மேற்படி ஏழு மாணவர்களுள் இருவருக்கு மக்கள் வங்கிக் கிளையினால் தலா 12 ஆயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிட்டு அதற்கான புத்தகங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-6-353)

## விசேட பயிற்சிநெறியை நிறைவு செய்த சுகாதாரத் தொண்டர்களுக்குச் சான்றிதழ்

பரந்தன்,டிசெ.20

கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவையினரின் அனுசரணையுடன் 'வேள்ட் விஷன்' நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான விசேட பயிற்சி நெறியை நிறைவு செய்தோருக்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்தச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட 'வேள்ட்விஷன்' நிறுவன திட்ட இணைப்பாளர் வி.பிறேம்குமார் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து சிறப்புரைகளை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவன உதவிப் பணிப்பாளர் மற்றும் நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் குணரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து 'வேள்ட்விஷன்' நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

ஆரம்ப மருத்துவம், கர்ப்பவதிகளுக்கான கர்ப்பகால பராமரிப்பு, போசாக்கு, தாதியர் பயிற்சி, சுகாதாரம் மற்றும் முதலுதவி ஆகியவை தொடர்பாக இந்தப் பயிற்சி வகுப்பில் விளக்கமளிக்கப்பட்டது. இதில் சுமார் 114 சுகாதாரத் தொண்டர்கள் பங்குபற்றினர்.

சான்றிதழ்பெற்ற அனைத்து சுகாதாரத் தொண்டர்களுக்கும் வன்னி மாவட்ட சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவு ஆணையாளர் ஸ்ரீதரன் எழுதிய முதலுதவி நூல் வழங்கப்பட்டது. (எ-6-352)

## கருத்தூட்டல் நிகழ்வு

பரந்தன்,டிசெ.20

நாவற்காடு பிரதேச விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

உலக விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து இந்தக் கருத்தூட்டலை ஏற்பாடுசெய்துள்ளது.

மிளகாய், கச்சான், கத்தரி, தக்காளி, பயிற்றை என்பனவற்றை பயிரிட்டு நிறைந்த பலாபலனை எவ்வாறு பெறுவது என்பது குறித்து கருத்தூட்டலில் விளக்கமளிக்கப்பட்டது.

உலக விவசாய ஸ்தாபனத்தின் பிரதிநிதி, விவசாயபோதனசிரியர், முள்ளியவளை பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ஆகியோர் இதில் கருத்துரைகளைவழங்கினர். (எ-352-304)

## வன்னிச் செய்திகள்

# கிளிநொச்சி மாவட்டத்தில் 95 விவசாயிகள் கௌரவிப்பு

பரந்தன்,டிசெ.20

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 95 விவசாயிகள் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சியிலுள்ள உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கல்) அலுவலகத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் பொதுச் சுடரினை கிளிநொச்சி மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அருளும் தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் மு.செந்திலும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து மங்களவிளக்கினை வடக்கு - கிழக்கு மாகாண விவசாயப் பிரதிப்பணிப்பாளர் க.சுப்பிரமணியம், கிளிநொச்சி மாவட்ட செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் செல்வி ஜெயராணி, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி பீ.நாமகள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா மற்றும் கிளிநொச்சி - முல்லைத்தீவு விவசாய பிராந்திய இணைப்பாளர் திருமதி இராமச்சந்திரன் உட்படப் பலரும் ஏற்றினர்.

கருத்துரைகளை உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) சதீஸ்வரன், நீர்ப்பாசனத் திணைக்கள கிளிநொச்சி மாவட்ட எந்திரி ந.கந்தசாமி உட்படப் பலர் நிகழ்த்தினர். சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் நிகழ்த்தினார்.

விவசாயத் திணைக்களம் 65 விவசாயிகளையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 30 விவசாயிகளையும் இவ்வாறு கௌரவித்துள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கௌரவித்த 30 விவசாயிகளில் விவசாயப் போதனாசிரியர் பிரிவுரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் பெயர் விவரம் வருமாறு:

**சிறந்த நெற்செய்கையாளர்**

பரந்தன் - ந.சத்தியசீலன் (ஊரியான்) சி.ஜெகநாதன் (ஊரியான்), சி.தெய்வேந்திரன் (ஊரியான்).

வட்டக்கச்சி - வே.செல்வவிநாயகமூர்த்தி (இராமநாதபுரம்), ச.பாஸ்கரன் (ஆறுமுகம் வீதி,வட்டக்கச்சி) ,ச.ச.சிவபாலச்சந்திரன் (சிவிக்சென்ரர் , வட்டக்கச்சி).

கண்டாவளை - நி.நிலாசினி (கட்டைக்காடு), கோ.யசோதா (கல்மடுநகர்), ச.மகேந்திரராசா ஜெயப்பிரகாஷ் (கல்மடுநகர்).

பூநகரி - நா.குணசேகரம் (மறவுறிச்சி பூநகரி), ப.மகேந்திரராசா (செட்டியகுறிச்சி), தனபாலசிங்கம் வதனா (சாமிப்புலம், பூநகரி).

பளை -பொ.கைலாசபிள்ளை (சங்கத்தார் வயல், பளை), செ. தங்கவேல் (சங்கத்தார் வயல், பளை), கு.ஐயாத்துரை (பளை).

சிவிநகர் - ம.கமலாதேவி (இராமநாதன் கமம்,புதுமுறிப்பு), தி.தயானந்தன் (சிவநகர், உருத்திரபுரம்) .த.கணேசமூர்த்தி (சிவன் சோலை உருத்திரபுரம்).

முழங்காவில் - க.யோகேந்திரம் (சோலபல்லகட்டு), பொ.நடேசபிள்ளை (சோலபல்லகட்டு), அ.நல்லையா (சோலபல்ல கட்டு).

மானாவாரி - கு.திருநாவுக்கரசு (வேரவில் முழங்காவில்), இ.பத்மதேவன் (முழங்காவில்),சி.இராசலிங்கம் (வேரவில்)

**வதிவிட வேளாண்மை**

பூநகரி - க.வைத்திலிங்கம் (நேரம்பன் பூநகரி),க.சத்தியசொரூபன் (நல்லூர் பூநகரி), ந.நாகேஸ்வரன் (தெளிவுரை, பூநகரி).

கிளிநகர் - ச.நடேசானந்தம் (கனகாம்பிகைக்குளம்), த.கணேசமூர்த்தி (சிவநகர் உருத்திரபுரம்), க.ஜெயக்குமார் (அம்பாள்குளம்).

இதேவேளை விவசாயத்திணைக்களத்தால் கௌரவிக்கப்பட்ட65விவசாயிகளின் பெயர்விவரங்கள்பின்னர் உதயனில் வெளிவரும். (எ-6-352)

# மன்னார் மாவட்ட வீரர்களுக்கு உதைபந்தாட்டச் சீருடைகள்

மன்னார், டிசெ.20

இளையோர் செயற்பாட்டு மையத்தினால் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு அண்மையில் ஒரு தொகுதி உதைபந்தாட்டச் சீருடைகள் வழங்கப்பட்டன.

இந்தச் சீருடைகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் கறுக்காய்குளம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதி இணைப்பாளர் கமல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ஜான், தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப்பொறுப்பாளர் உமைநேசன், தமிழீழ அரும் பொருள் காட்சியகப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன், மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை மற்றும் துணைப் படை பயிற்சி ஆசிரியர் காளித் ஆகியோர் வீரர்களுக்கான சீருடைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் முந்நூறுக்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை- ஏனைய மாவட்டங்களில் உள்ள வீரர்களுக்கும் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் உதைபந்தாட்டச் சீருடைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-6)



கிளிநொச்சி, குமுழமுனை அ.த.க. பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது.ஒளிவிழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வு ஒன்றைப் படத்தில் காணலாம். (படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# கேணல் கிட்டு நினைவாக நாட்டுக்கூத்துப் போட்டி

## மன்னார் கலை மன்றங்களுக்கு இடையில்

மன்னார்,டிசெ.20

மன்னார் மாவட்ட நுண்கலைக் கல்லூரி கேணல் கிட்டு நினைவாக நாட்டுக்கூத்துக் கலைப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மன்னார் மாவட்ட அரசியல்துறையின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள கலைமன்றங்கள், நாடகக் குழுக்கள், பாடசாலைகள் என்பன பங்குபற்றமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கேணல் கிட்டுவின் போராட்ட வரலாற்றை முதன்மைப்படுத்தியதாக இந்த நாட்டுக் கூத்துப் போட்டி ஆக்கங்கள் அமையும் என்றும் -

முதல் மூன்று இடங்களைப் பெறும் கூத்துக்கள் கேணல் கிட்டு நினைவு நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக அரங்கேற்றப்படும் என்றும் -அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்கு பற்றவிரும்புவோர் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். (எ)

# யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர்
## உயர்திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா அவர்களின்
# சேவை நலன் பாராட்டுவிழா சிறப்புமலர் - 20.12.2005

## அருளாசிச்செய்தி

அன்புசால் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபராக இருந்து ஓய்வுபெறும் திரு. நடராசா அவர்களைப் பாராட்டுகின்றோம். புனிதமான ஆசிரியப் பணியை நிறைவாகச் செய்தவர் திரு. நடராசா பாடசாலையின் வளர்ச்சிக்காகப் தன்னிகரில்லாத பணியை ஆற்றிய பெருமைக்குரியவர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பணியாற்றிய திரு.நடராசாவினது ஓய்வு அனைவரிற்கும் மன நெகிழ்வைத் தந்தாலும் அவருடைய பணி பாராட்டுதற்குரியது.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

## "கல்விச் சமூகத்தின் உன்னத காவலர்" நான்கண்ட மகா அதிபர்

மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த அதிபர் கல்வியறிவிற்கு கரையே காணமுடியாத மகா சமுத்திரம்.

யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் அதிபராக சுமார் எட்டு ஆண்டுகாலம் செய்த சேவைகள்,சாதனைகள் அளப்பரியன. அத்தனையும் தன்னுடைய ஆற்றலினாலும், விடாமுயற்சியினாலும் செய்தார் என்பதை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களின் வரிசையில் முதலிடம் நான் கண்ட மகா அதிபருக்கே உரியதாகும். அதிபர் அவர்கள் இளைப்பாறிச்சென்றாலும் தனது ஆசிரியப் பணியைத் தொடரவேண்டும் என்பதே எம் அவா. இக்கல்லூரியின் பழைய மாணவர் என்ற வகையில் கல்விச் சமூகத்தின் உன்னத காவலராக அதிபர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி அடியேனின் நல்லாசிகளையும் கூறி அமைகிறேன்.

வாழ்க வளமுடன்

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.
*சிவாச்சாரிய பீடாதிபதி,*
*அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.*

## நல்லவருக்கு நன்றி

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி அதிபர் திரு. கிருஸ்ணபிள்ளை நடராசா இளைப்பாற இருக்கும் செய்தியை நம்புவது சிரமமாக இருக்கிறது. சில வாரங்களுக்குமுன் அவரைச் சந்தித்தபோது கல்வி வளர்ச்சி, கல்லூரி அபிவிருத்தி குறித்து அவரின் ஆர்வம், ஆக்கபூர்வமான செயற்பாடுகள், துடிதுடிப்பும், சுறுசுறுப்பும் இணைந்த தோற்றம் ஆகியவற்றைக் கொண்டு மதிப்பீடு செய்தபோது நாற்பதுகளில் வாழும் அதிபராகவே கருதிக்கொண்டேன். 1980களில் யுத்தத்தால் சிதைக்கப்பட்ட கல்லூரியை மீளக்கட்டியமைத்த பெருமை இவருக்குரியது.

பாடசாலையின் உயர்ச்சிக்காக சுமார் ஏழெட்டு ஆண்டுகளில் அதிபர் நடராசா ஆற்றிய பணிகள் பல. அத்தனையும் பாராட்டத்தக்கவை. அ.மி. கல்லூரி வரலாற்றில் அவருக்கும் ஓரிடம் உண்டு.

அரச நடைமுறை காரணமாக இளைப்பாறும் நல்லவருக்கு நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

*கல்வி அமைச்சு,* உடுவை எஸ். தில்லை நடராசா,
*இசுறுபாய, பத்திரமுல்ல.* *மேலதிக செயலாளர்.*

## அறிவொளியேற்றிய அதிபர்

கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தை அண்மித்த அதிபர் கி. நடராசாவின் சேவைக்காலம் சோதனைகளும் வேதனைகளும் நிறைந்தது. ஆனால், சாதனைகளும், போதனைகளும் நிகழ்ந்த ஒன்று காலச் சூறாவளியால் வரலாற்றுக் குறியீட்டுச் சின்னமாகக்கிடந்த கல்லூரித்தாய்க்கு உருவுந் திருவுருவுந் தந்து கலைக்கோயிலாக்கிய சிற்பிகளிலே முன்னணியில் நிற்பவர் நடா என்பது மிகையானதன்று.

அவரால் கல்லூரி உயர, கல்லூரியின் வளர்ச்சிப் பெருமிதத்திலே அவரும் உயர்ந்துள்ளார். ஓய்வுபெற்றுச்செல்லும் அவர் தம் வாழ்வில் எண்ணிய எண்ணியாங்கு சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

*வடமராட்சிக் கல்வி வலயம்,* வ. செல்வராசா,
*புலோலி.* வலயக்கல்விப்பணிப்பாளர்.

## பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு.கி.நடராசா அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் தனது பற்றுறுதியும் அர்ப்பணிப்பும் உள்ள சேவையினால் வடமராட்சிக் கல்விச் சமூகத்தின் வரலாற்றில் நிலையான இடத்தினை பிடித்துள்ளார். போர் அனர்த்தங்களினால் சேதமுற்றிருந்த இப்பாடசாலையின் கட்டுமானங்களையும், பௌதிக வளங்களையும் குறுகிய காலத்தில் திட்டமிட்ட முறையில் உருவாக்கி இப்பாடசாலையை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற போதிலும் தன்னை முழுமையாக சமூகப்பணிக்காகவும் பொதுச்சேவைக்காகவும் அர்ப்பணித்து இச் சமூகத்தின் வழிகாட்டியாக விளங்க இவருக்கு நீண்ட ஆயுளையும் உடல் நலத்தையும் எல்லாம் வல்ல இறைவன் வழங்க வேண்டுமென பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சத்தியசீலன்,
பிரதேச செயலர், கரவெட்டி.

## சாதனை நாயகனின் சாசனம்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் என்னும் ஆலயத்தினை அழகாகப் போற்றி அகிலமெங்கும் புகழ் மணம் பரப்பிய அதிபர் திரு. கி. நடராசா அவர்களின் சேவையினைப் பாராட்டுவதில் மன நிறைவடைகிறோம்.

பௌதிக வளப்பாற்றாக்குறைகள் மிகுந்த காலகட்டத்தில் அனைத்து சவாலையும் எதிர் நேர்கி, பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து, இன்றும் கல்லூரி நிமிர்ந்து நிற்க வேராகி, விழுதான அவரின் சேவை வார்த்தைகளுக்குள் அடங்கக்கூடியதல்ல. அவர் ஓய்வு பெறுவது தவிர்க்க முடியாதது. எனினும், கல்லூரியுடனான உங்கள் உறவு காலமெல்லாம் நிலைத்திருக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையோடு இனிவரும் காலங்களும் இன்பமயமாய் அமைய வாழ்த்துகின்றோம்

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(44260)(42-16-19)



உயர்திரு. கி.நடராசா B.A.Dip. in Ed., M.A., S.L.T.S. I

### கற்றற் பாதையில்

பிறப்பு:- 20.12.1945
பிறந்த இடம்:- கம்பர்மலை
தந்தை:- ஆழ்வாப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
தாய்:- கிருஷ்ணபிள்ளை சரஸ்வதி
ஆரம்பக்கல்வி:- வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை
இடைநிலைக்கல்வியும்,
சிரேஷ்ட இடைநிலைக்கல்வியும்:- யா/ சிதம்பராக் கல்லூரி.
உயர் கல்வி :- கொழும்பு பல்கலைக்கழகம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா:- யாழ். பல்கலைக்கழகம் (1982-1983)
முதுகலைமாணிப்பட்டம்:- யாழ். பல்கலைக்கழகம் (1985-1990)

கற்பித்தற்சேவை:-
01.11.1976-31.12.1977- கமு/ அல் அஸ்ரக்கர் மகாவித்தி யாலயம்
01.01.1978-08.06.1997- யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
09.06.1997- இன்றுவரை -யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

01.11.1976 - ஆசிரியப்பணி
16.03.1982 - பகுதித் தலைவர்
21.12.1990 - பிரதி அதிபர்
09.06.1997 - அதிபர்

இடைவரவு விரிவுரையாளர் :- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு 1997 தொடக்கம் 2000 வரை கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும்.
இடைவரவு விரிவுரையாளர்:- முதுகலைமாணி மாணவர்களுக்கு 2001 தொடக்கம் 2002 வரை கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும்.

## சூரியனே! உனக்குமா ஓய்வு....?

திரு.கி.நடராசா..! இது வெறும்பெயரல்ல! பிரபஞ்சத்தின் சுருக்கம். யுகங்களில் தோன்றும் அதிசயங்களில் ஒன்றாகவே அவரை நான் காண்கின்றேன். இது உபஅதிபராக இருப்பதனால் கூறும் உபசார வார்த்தையன்று. உள்ளத்தைப் புரிந்து கொண்டதனால் கூறுகின்ற உணர்வுகளின் தொகுப்பு.

பல்லவர் காலத்தில் மாமல்லபுரத்துப் பாறைகள் உயிர்த்தெழுந்ததைப் போலவே, இவரது காலத்தில்உடுப்பிட்டி அமெரிக்க மிஷனும் உயிர்த்தெழுந்து கல்விருட்சங்களாய் நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களுக்கு மட்டும் ஆன்மா இருந்தால் என் வார்த்தைகளின் வலிமையினை அவையே உணர்த்திநிற்கும். தென்பொதிகைச் சாரலில் தவழ்ந்த தமிழை, தென்னவரின் மஞ்சத்தில் துயின்ற தமிழை நம்மவரும் கண்டடைய வேண்டுமென்று பிரமன் அனுப்பி வைத்த பிரதிவிம்பம் அவரென்பதை என் இதயம் ஏற்று நிற்கின்றது.

இராமனைச் சீதை பிரிந்ததுண்டு. இலக்குவன் பிரிந்ததில்லை! இத்தனை காலமும் இலக்குவனாய் இருக்கும் பேற்றை என் ஒருவனுக்கே அளித்த இறைவனுக்கு நன்றி உரைத்து, அஞ்சாமை, நேர்மை, அறிவுடைமை கொண்ட எமது அதிபரின் சேவை நலன் பாராட்டுவதில் சேதுஅணைக்கு மண்சுமந்த அணிலாய் திருப்தி கொள்கின்றேன்.

க.தர்மலிங்கம்,
*பிரதி அதிபர்.*

## தனக்குவமையில்லாத செயல்வீரன்

வடமராட்சிப்பகுதியில் சிறந்த கல்விமானாகவும் சமூக கலை இலக்கிய விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடு கொண்டவரும் மூன்று தலைமுறை கண்ட முதுபெருந்தமிழ் ஆசானுமாகிய திரு. கி.நடராசா அவர்கள் கல்லூரியின் கட்டமைப்பில் பலமாற்றங்களை ஏற்படுத்தி அதன் புகழை மென்மேலும் மிளிரச் செய்த சாதனையாளன் என்றால் அது மிகையாகாது. சிறந்த நிர்வாகியாகவும் நுண்ணிய மதிநுகியாகவும் கருமமாற்றி, கல்லூரியின் இணைச் செயற்பாடுகளை முன்னெடுத்த பெருந்திட்டமிடலாளன் எளிமையான உடையும் சாதுவான தோற்றமும் கொண்ட இவரின் பணிப்பாதை கல்லூரி கண்ட அதிபர்களின் வரலாற்றில் ஆழப்பதிந்த சுவடுகளாகும். அவரது இயல்பான பணிகள் சிறக்க இறைவன் துணைபுரிய வேண்டுமென்று ஆசிரியர் ஊழியர் குழாம் சார்பாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.க.செபநேசன்,
*தலைவர்,*
*ஆசிரியர் ஊழியர் நலன் புரிச்சங்கம்.*

## செயல்திறன் மிக்க அதிபர்

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மிகத்தொன்மை வாய்ந்த கல்லூரியாகும். ஒரு நூற்றாண்டாக மிஷனறியினரால் சகல துறைகளிலும் புகழ்பெற்று வளர்ந்து நின்ற இக் கல்லூரியில் ஆண்டுதோறும் சிறப்புறக்கொண்டாடப்பட்டுவரும் கிறிஸ்மஸ் ஒளிவிழா நிகழ்ச்சிகள் மூலம் பிறசமயங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டுவரும் ஒற்றுமை, புரிந்துணர்வு தொடர்ந்தும் பேணப்படவேண்டும்என ஆசிக்கின்றேன். "உங்களுக்குப் பணிக்கப்பட்ட யாவற்றையும் செய்தபின் நாங்கள் பயனற்றபணியாளர்கள், எங்கள் கடமையைத்தான் செய்தோம் எனச் சொல்லுங்கள்".லூக்17:10

அருட்தந்தை ப.இருதயதாஸ்,
*பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர்.*

## கல்வியாளன் வாழ்க

வடமராட்சியின் தலைசிறந்த கல்வியாளனான திரு.கிருஸ்ணபிள்ளை நடராசா, கல்விக்குடும்பம் ஒன்றின் இரண்டாவது தலைமகனாவார். எமது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அழிந்து சிதைவுற்று எவ்வித உட்கட்டுமானமும் இல்லாதிருந்தவேளை, அதிபராகக் கடமையேற்ற நண்பர் திரு. நடராசா, தனது முயற்சிகளால் உட்கட்டுமானங்கள் சகலதையும் ஏற்படுத்திக் கல்லூரித்தாயைப் பொலிவுறச் செய்தவர். காலை 7மணிக்கே இப்பாடசாலைக்கு வந்துவிடும் திரு.கி.நடராசா கல்லூரிக்கான தனது கல்வித்தொண்டை சிறப்புற ஆற்றி ஓய்வு பெறுகின்றார் அவர்தம் ஓய்வுக்காலத்தில் சுகத்துடனும், சிறப்புடனும்வாழ்ந்து தொடர்ந்தும் கல்விச்சமூகத்திற்குத் தொண்டாற்றவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

வே.தி. செல்வரத்தினம்
*பழையமாணவனும், முன்னாள் அதிபரும்,*
*யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர்.*

## வாழ்த்துச்செய்தி

மணிவிழாக்காணும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு. கிருஸ்ணபிள்ளை நடராசா அவர்களை வாழ்த்துவதில் மனம் மகிழ்கின்றேன்.மணிவிழாக் காண்பவர்கள் தாம் ஆற்றிவந்த அரசபணியிலிருந்து ஓய்வு பெறுவது வழமையாகிவிட்டது. அதேவேளை பரந்துபட்ட பணிகளில் ஒன்றையோ சிலவற்றையோ தம் ஆற்றலுக்கேற்ப தம் பணியாக சுயாதீனமாக ஏற்பதும் இம்மணிவிழாக்காலத்தில்தான். எனவே அதிபர் திரு.கி.நடராசா அவர்கள் தாம் கடந்துவந்த அனுபவங்களும், சவால்களும், அபிலாசைகளும், கற்பனைகளும் எழுத்துவடிவாகவோ அல்லது செயல்வடிவாகவோ வெளிப்படுத்தவேண்டிய ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது.அந்த எதிர்பார்ப்பிற்கு தளம் அமைக்கும் இனிய காலமாக இம்மணிவிழா அமையட்டும் என்று மனமார வாழ்த்துகின்றேன்.

வண. V.N.தர்மகுலசிங்கம்,
*தென்னிந்திய திருச்சபை உடுப்பிட்டி.*

## நல்லாசான் நடராசாவின் கல்விப்பணி

உணர்வோடு தமிழ்கற்பிக்கும் ஆசிரியர்களை என்றும் உயர்வாகவே மதித்து வருகின்றேன். இலக்கியச்செழுமைமிக்க தமிழ் மொழியில் புலமையுடையோர் பேச்சுவன்மையாலும் ஆற்றலாலும் எந்தக் காரியத்தையும் இலகுவாகச் சாதித்து விடுவர். திரு. கி.நடராசா ஆசிரியரிடம் இந்த ஆற்றல் மிகுதியாகவே காணப்படுகிறது.

அகவை அறுபது நிறைந்து அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது கல்விப்பணி தொடர்ந்து கொண்டேயிருக்கும். தனது பாடசாலைக்கு அப்பாலும் கல்விப்பணியை மேற்கொண்டு வருவதனால் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையும்.

க.அம்பலவாணர்
*கோட்டக்கல்விப்பணிப்பாளர், கரவெட்டி.*

## திரு. கி. நடராசா அவர்களின் சேவைநலன் பாராட்டு

திரு. கி. நடராசா அவர்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்று எட்டரை வருடங்கள் சேவையாற்றினார். இன்று அறுபதாவது அகவை நிறைவுசெய்து இளைப்பாறும் இவ்வேளையில் அவரது சேவைகளைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு கி.நடராசா எமது கல்லூரிக்கு அதிபராக அமைந்தது கல்லூரிபெற்ற ஒரு பெரும்பாக்கியமாகும். பல்வேறு குறைபாடுகளுடன் கல்லூரி காணப்பட்ட காலத்தில் தனது கடமையினைப் பொறுப்பேற்று செயலாற்றி வெற்றிகண்டார்.

இவரது ஓய்வுக்காலம் நலத்துடனும், மகிழ்வுடனும் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வைத்திய கலாநிதி எம்.தங்கராஜா BVSC. M.Sc.(SL)
*தலைவர், பழைய மாணவர் சங்கம்.*

## பாராட்டுக்குரிய கல்வியியல் சேவையாளன்

உடுப்பிட்டியிலும் அதன் அயற்புறக் கிராமங்களிலும் வாழ்கின்ற மக்களுக்கு அறிவெனும் ஒளியினால் இருளகற்றி பல்வேறு மேதைகளையும் புத்திஜீவிகளையும் உருவாக்கி வருகின்ற கல்லூரியில் கடந்த எட்டு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி டிசெம்பர் 19ஆம் திகதியுடன் ஓய்வு பெறும் அதிபர் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

குறைபாடுகள் மத்தியிலும் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி, விளையாட்டுத்துறை அபிவிருத்தி, கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை சிறந்த முறையில் முன்கொண்டு நடத்தியுள்ளார். அதேவேளையில் கட்டடங்களுக்கான தேவையையும் பெருமளவில் விருத்தி செய்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து இக்கல்லூரியின் சகல வளங்களையும் விருத்திசெய்வதில் தன்னலம் பாராது சேவையாற்றியுள்ளமை பாராட்டுக்குரியது. அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஒரு கல்வியியலாளனாயிருந்து எமது சமூகத்திற்குத் தொடர்ந்தும் சேவையாற்றுவதற்கு அவருக்கு உடற்சுகத்தையும் நீண்ட ஆயுளையும் தரவேண்டுமென எல்லாம் வல்ல ஆண்டவரின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி இ.குட்டித்தம்பி
*அதிபர், யா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி*

அனுசரணை:- **ஆசிரியர், ஊழியர் நலன்புரிக் கழகம், யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, வல்வெட்டித்துறை.**

# மக்கள் மீதான தாக்குதல் தொடர்கிறது யுத்தநிறுத்த ஒப்பந்தம் நூலிழையில்!

## யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டு நூலிழையில் உள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியல் துறையினர், தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக ஸ்ரீலங்காப் படைத் தரப்பினரின் நடவடிக்கைகள் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. வீதி ரோந்து நடவடிக்கைகள், தேடுதல்கள், சுற்றிவளைப்புகள் மூலம் விசாரணைகள் ஏதுமற்ற நிலையில் பொதுமக்களை தாக்கி காயப்படுத்தல், அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தல், துப்பாக்கிப் பிரயோகம் செய்து காயப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் பரவலாக இடம்பெறுகின்றன.

எந்தநேரம், என்ன நடக்குமோ என்ற நிலைமையில் யாழ்ப்பாண மக்கள் அச்சத்துக்குள்ளாகியுள்ளனர். இந்த நிலைமைகளால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டு, நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய நிலையை தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாங்கள் விரும்பவில்லை. இருந்தும் நாங்கள் அதற்கு மாற்றீடான சூழலை ஏற்படுத்த வேண்டும் - அமைதி நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நிலையிலேயே உள்ளோம்.

படைத்தரப்பினர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பேணுவதற்குப் பதிலாக அதை செயலிழக்க வைக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுவருகின்றார்கள்.

கடந்த காலத்தில் நாங்கள் யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியேறிய பின்னர் எமது தேசப்பற்றாளர்கள்ான இரு பாடசாலை அதிபர்கள் படைத்தரப்பினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி நீர்வேலிப்பகுதியில் இரு இளைஞர்களும் ஊர்காவற்றுறையில் ஓர் இளைஞரும் கொல்லப்பட்டுள்ளனர்.

படைத்தரப்பினரின் செயற்பாடுகள் யாவும் தமிழ் மக்களை வேண்டும் என்றே கொலை செய்யும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படுவதாக உள்ளது. இநத நிலைமை குடாநாட்டு மக்களை பெரும் அச்சத்துக்குள்ளாக்கி உள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு அல்லைப்பிட்டிப் பகுதியில் கடற்கரை சிப்பாய் ஒருவரால் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார். மக்கள் அங்கு கூடியதால் சிப்பாய் ஓடிவிட்டார்.

அதேபோன்று, வடமராட்சி வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையிலுள்ள படைத்தரப்பினரது முகாமுக்கு அருகில் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபின் தூக்கிலிட்டு கொலைசெய்யப்பட்டார்.

பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்க எழுதுமட்டுவாழ்ப் பிரதேசத்தில் 14 வயதுச் சிறுமி ஒருத்தியை இழுத்துச் சென்ற சிப்பாய் மக்கள் கூடியதால் சிறுமியை விட்டுவிட்டு ஓடிவிட்டார்.

இவ்வாறு தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படைத்தரப்பினரதும் , கடற்படையினரதும் பாலியல் வல்லுறவுகள், வல்லுறவு முயற்சிகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் புங்குடுதீவு ஏழாம் வட்டாரம், மடத்து வெளியை சேர்ந்த இளையதம்பி தர்சினி பெரிய தாயாரின் வீட்டிற்கு இரவில் சென்று வருவதை அவதானித்து காத்திருந்து அப்பெண்ணை பலவந்தமாக இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் கொலை செய்துள்ளனர். சடலத்தை படைமுகாமுக்கு அருகிலுள்ள பாழடைந்த கிணற்றுக்குள் போட்டுள்ளனர். இவ்வாறு பாலியல் வல்லுறவுகளும், வல்லுறவு முயற்சிகளும் அதிகரித்துச் செல்கின்றன.

படையினராலும் கடற்படையினராலும் எமது பெண்கள், பாடசாலை சிறுமிகள் மீது நடத்தப்பட்டு வரும் பாலியல் வல்லுறவுகள், வல்லுறவு முயற்சிகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு தெரிவித்துள்ளோம். எமது கண்டனத்தையும் தெரிவித்துள்ளோம்.

அரசியல் துறையினர் யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியேறிய பின்னர் குடாநாட்டில் 14 இற்கும் மேற்பட்ட கொலைகள், கொலை முயற்சிகள், 6 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவையனைத்தும் இன்று யுத்த நிறுத்தத்தை ஓர் ஆபத்தான நிலைக்குள் தள்ளும் நிலையை உருவாக்கியுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு படைத்தரப்பினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை குழப்பும் நோக்குடன் செயற்பட்டு வருகிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகின்றது என்றுள்ளது.

# புங்குடுதீவு யுவதி படுகொலை: கடற்படையே முழுப்பொறுப்பு

## நயினாதீவு கூட்டுறவுச் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.20

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி என்ற யுவதி கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு கடற்படையினரே முழுப் பொறுப்பு.

இவ்வாறு தெரிவித்துள்ளது புங்குடுதீவு - நயினாதீவு பல நோ.கூட்டுறவுச் சங்கம்.

இது விடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் :-

இளையதம்பி தர்சினி என்ற இளம் யுவதியை கடற்படையினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படுகொலை செய்திருப்பது தமிழ் மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இச்செயலை நாம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்.

கடற்படையின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள புங்குடுதீவில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளதால் இந்தக் கொலைக்கு கடற்படையே பொறுப்பு ஏற்கவேண்டும்.

ஏற்கனவே, குடாநாடு படையினரின் கெடுபிடியில் சிக்கியுள்ளது.மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

போர் நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன நடைமுறையில் உள்ள சூழ்நிலையில் இவ்வாறான காட்டுமிராண்டித் தனமான சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் கவலைக்குரியது.

பள்ளி மாணவி கிருஷாந்தி, புங்குடுதீவு குருக்கள் மனைவி சாரதாம்பாள் என தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் கொலைகள் ஒன்றன் பின்ஒன்றாகத் தொடர்கின்றன.

தமிழ்ப் பெண்களது வாழ்வை சீரழித்து சின்னாபின்னமாக்கி அவர்களது எதிர்கால வாழ்வை முடக்குவதற்கு படையினர் செயற்படுகின்றனர் என தமிழ்ப் பெண்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, பெண்கள் தமது பாதுகாப்பை தாங்களே கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுவார்கள் என்பதை இவ்வறிக்கை மூலம் தெரியப்படுத்த விரும்புகிறோம் - என்று அதில் உள்ளது. (எ)

# பத்திரிகையாளர் பணிக்கு மிகப் பெரும் அச்சுறுத்தல்!

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சீற்றம்

கொழும்பு, டிசெ. 20

தமிழ் ஊடகவியலாளர் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டு கிரிமினல்கள் போல நடத்தப்பட்டமை பத்திரிகையாளர் பணிக்கு விடப்பட்டுள்ள மிகப் பெரும் அச்சுறுத்தலாகும்.

- இவ்வாறு சீறியிருக்கின்றது தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்.

இவ்விவகாரம் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்ஷன யாப்பாவுக்கு ஒன்றியம் நேற்றுமுன்தினம் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம். 'தமிழ் ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல்' என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:-

கொழும்பிலிருந்து வெளியிடப்படும் தமிழ்த் தேசியப் பத்திரிகையான 'தினக்குரல்' பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளரான பா.பார்த்தீபன் மற்றும் தினக்குரல் கணனிப் பிரிவு ஊழியர்களான கோகுலன், சர்வேஸ்வரன் ஆகியோர் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு, சாதாரண கிரிமினல் குற்றவாளிகளைப் போல பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகள் இனி மேலும் தொடராதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஊடகத்துறை அமைச்சர் என்ற முறையில் உங்களை எமது அமைப்பு கேட்டுக் கொள்கிறது.

கடந்த சனிக்கிழமை தமது இரவுப் பணிகளை முடித்துக்கொண்டு அலுவலக வாகனத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே இரவு 11.30 மணியளவில் வெள்ளவத்தை, பாமன்கடைப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரினால் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவுடனேயே தம்மிடமிருந்த தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை, தகவல் திணைக்கள அடையாள அட்டை என்பவற்றை பார்த்தீபன் சமர்ப்பித்து, தாம் இரவு பத்திரிகைப் பணியை முடித்துக்கொண்டு வருவதை உறுதிப்படுத்திய போதிலும், அவற்றை அலட்சியப்படுத்திய படையினர், இம்மூன்று ஊழியர்களையும் கைதுசெய்து கிருலப்பனை பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைத்துள்ளார்கள்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையைக் கூட அலட்சியப்படுத்திவிட்டு, கிரிமினல் குற்றவாளிகளைப் போல இவர்களைத் தடுத்துவைத்து விசாரணைக்குட்படுத்தியிருப்பது தமிழ் ஊடகவியாலாளர்களுக்கான ஒரு பெரும் அச்சுறுத்தலாகவே நாம் கருதுகின்றோம். நள்ளிரவிலேயே கிருலப்பனை பொலீஸ் நிலையத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட இவர்களிடம், கிரிமினல் குற்றவாளிகளிடமிருந்து பெறப்படுவது போல கைவிரல் அடையாளங்கள் பெறப்பட்டதுடன், இவர்களைப் பொலீஸ் அதிகாரிகள் புகைப்படமும், வீடியோப்படமும் எடுத்திருக்கின்றார்கள்.

தமது கடமையை முடித்துக் கொண்டு செல்லும் ஊடகவியலாளர் ஒருவரை, அவர் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக இவ்வாறு கிரிமினல் குற்றவாளி ஒருவரைப் போல பொலீஸார் நடத்தியிருப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகவும், மனிதாபிமானச் சட்டங்களுக்குப் புறம்பான நடவடிக்கையாகவுமே நாம் கருதுகின்றோம். இவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை தொடர்பாக, அவரைக் கைது செய்த பொலீஸாரோ, தடுத்து வைத்திருந்த பொலீஸாரோ உறவினர்களுக்கோ, 'தினக்குரல் ' அலுவலகத்துக்கோ அறிவிக்கவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. படையினரின் இவ்வாறான நடவடிக்கை தமிழ் ஊடகவிலாளர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றது என்பதைத் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவரவிரும்புகிறோம்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலுள்ள 'நமது ஈழநாடு' அலுவலகம் படையினாரால் கடுமையாகச் சோதனையிடப்பட்டது. அங்கு கடமையாற்றும் ஊடகவியலாளர்களும் படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இந்த நிலையில் இப்போது தலைநகர் கொழும்பில் தேடுதல் நடவடிக்கைகளின் போது தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் பொலீஸாரால் மோசமாக நடத்தப்பட்டிருக்கின்றார்.

சமூகத்தில் ஊடகவியலாளர்களுக்குள்ள முக்கியமான பொறுப்பை நீங்கள் பல சந்தர்ப்பத்தில் வலியுறுத்தியிருக்கின்றீர்கள். ஜனாதிபதி மஹிந்தவின் சிந்தனைகளிலும் இது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அச்சுறுத்தல்களோ, அச்சமோ இல்லாத ஒரு நிலையிலிருந்து செயற்படும்போது தான் மக்கள் மத்தியில் உறுதியான, ஆரோக்கியமான கருத்துகளை ஊடகவியலாளர்களால் சுதந்திரமான முறையில் கொண்டுசெல்ல முடியும். சோதனைகள், தேடுதல்களின்போது ஊடகவியலாளர்கள் கிரிமினல் குற்றவாளிகள் போல நடத்தப்படும் நிலை தொடர்வது அவர்களது இந்தப்பணிக்கு விடுக்கப்படும் ஓர் அச்சுறுததலாகவே நாம் கருதுகின்றோம்.

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளின்போது, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு உங்களை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

- என்றுள்ளது. (க)

# எரிபொருள் நிலையங்களை நவீனமாக்க முகவர்களுக்கு ரூ.10 லட்சம் கடன் உதவி

## கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்துகின்றது

அரியாலை,டிசெ.19

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகவர் நிலையங்களாகச் செயற்படும் எரிபொருள் விற்பனை நிலையங்களை கணனி வசதியுடன் நவீனமயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை கூட்டுத்தாபனத்தின் கொழும்பு தலைமையகம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விற்பனை நிலையங்களின் பணிகளை தன்னியக்கமாக மாற்றி நவீனப்படுத்துவதற்கு வசதியாக வட்டியில்லாத கடன் திட்டம் ஒன்றையும் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்த உள்ளது. குறைந்தது 10 லட்சம் ரூபாவை கடனாக வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு வழங்கப்படும் இந்நிதி ஐந்து வருட காலப் பகுதிக்குள் மீளச் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூட்டுத்தாபனம் வெளியிட்ட சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை- குடாநாட்டில் செயற்பட்டுவரும் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விற்பனை நிலையங்களை இவ்வாறு தன்னியக்கமாக்கி நவீனமயப்படுத்த விரும்பும் முகவர்கள் இன்று 20ஆம் திகதிக்கு முன்னர் கடன் பெற விண்ணப்பிக்கவேண்டும் என்று பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் கேட்டுள்ளார்.

எரிபொருள் விற்பனை நிலையங்களைக் கணனி மயப்படுத்துவதன் மூலம் ஏற்படும் அனுகூலங்களைக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது. (ஐ-17)

# வர்த்தக அமைப்பின் மாநாடு ஹொங்கொங்கில் நிறைவுற்றது

ஹொங்கொங்,டிச.20

ஹொங்கொங்கில் நடைபெற்று வந்த உலக வர்த்தக அமைப்பின் மாநாடு நிறைவு பெற்றுள்ளது. கடந்த சில நாள்களாக இடம் பெற்ற கடுமையான விவாதங்களுக்குப் பின்னர் செல்வந்த நாடுகள் மற்றும் வறிய நாடுகள் இடையில் வர்த்தகத்தை மேம்படுத்தும் பல நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற உடன்படிக்கையுடன் அது முடிவுக்கு வந்தது.

உலகவர்த்தக அமைப்பு மாநாட்டின் இறுதிநாளான நேற்று முன்தினம் 149 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கடுமையான பேரம்பேச்சுகளின் பின்னர் மாநாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தால், செல்வந்த நாடுகளின் வேளாண் ஏற்றுமதிக்குக் கிடைத்துவரும் மானியங்கள் 2013 ஆம் ஆண்டுடன் படிப்படியாக நிறுத்தப்படவேண்டும். வளர்முக நாடுகள் ஏற்றுமதி செலவும் அனைத்து பொருட்கள் மீதான உரிமையும் செல்வந்த நாடுகள் அகற்ற வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மாநாட்டுக் கூட்டத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியாக ஊர்வலம் நடத்தினர். இதற்கு முன்னதாக 900 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பூட்டானில் ஜனநாயகத் தேர்தல் 2008ஆம் ஆண்டில் நடைபெறுமாம்

## அந்நாட்டு மன்னர் அறிவிப்பு

பூட்டானில் முதன்முறையாக ஜனநாயக முறைப்படி நாடாளுமன்றத் தேர்தல் 2008ஆம் ஆண்டு நடைபெறும் என மன்னர் ஜிகமேசிங்யேவாங்க் அறிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு தான் பதவி விலகப் போவதாகவும் தனது மகனும் பட்டத்து இளவரசருமான காஷோஜிகமேவாங்க் புதிய மன்னராக பொறுப்பேற்பார் என்றும் வாங்க் தெரிவித்தார்.

''நாட்டுக்கு முழுத் தகுதியுடன் சேவை செய்ய வேண்டுமேயானால் மன்னருக்கு அனுபவ அறிவு இருக்க வேண்டியது அவசியம். எனவே, இதற்காக 2008ஆம் ஆண்டு மன்னர் பொறுப்பை இளவரசரிடம் ஒப்படைக்க இருக்கிறேன்'' என மன்னர் வாங்க் தெரிவித்தார்.

1972ஆம் ஆண்டு தனது தந்தை இறந்ததையடுத்து தனது 17ஆவது வயதில் மன்னராக வாங்க் பதவியேற்றார். 2008ஆம் ஆண்டு ஜனநாயக முறைப்படி பூட்டானில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என்றும், மன்னர் வாங்க் தெரிவித்துள்ளார்.

மன்னருக்கு ஐந்து மகன்களும், ஐந்து மகள்களும் இருக்கின்றனர். பட்டத்து இளவரசர்தான் எல்லோருக்கும் மூத்தவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஈழத் தமிழர்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து நிகழ்ச்சி முன்வடிவுகளும் இப்போது நடந்து கொண்டிருப்பதை நாம் காணுகின்றோம்.

1970களிலே வியட்நாம் போர் நடந்த போது அமெரிக்க மக்கள் வீதிக்கு இறங்கி போருக்கு எதிராக தங்களது உயிர்களைத் தியாகம் செய்த போராட்டப் பேரணிகள் இன்றைக்கும் நினைவுக்கு வருகிறது. அதே போல் சிங்களத்திலே நடக்குமா என்று நாம் சொல்லத் தயாரில்லை. நடக்காது என்று நன்றாகத் தெரிந்தும் கூட சிங்கள மக்கள் மீது நாம் பற்று வைத்து கேட்கிறோம். சிங்கள மக்களே, நீங்கள் இறங்கிச் செயற்படாவிட்டால் மீண்டும் பணயக் கைதிகளாக மாறக் கூடிய அபாயம் ஏற்பட்டு அதன்விளைவுகளை அனுபவிக்க நேரிடும்.

தமிழ் மக்களின் வாழ்விலே புதிய நிலை ஏற் பட்டிருக்கிறது. சிங்கள மக்களை இது பாதிக்கும் - இதை அவர்கள் புரிந்துகொள்ளாவிட்டால் சர்வதேசச் சமூகத்தை இது பாதிக்கும் - இதை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ளாவிட்டால் இதை அறிவதற்கு இறுதிச் சந்தர்ப்பமாக இந்தக் காலகட்டம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நிச்சயமாக தெரிவித்துக்கொள்கிறோம்.

இதுகுறித்து இனி புலிகளை குற்றம்சாட்டுவதோ, அவர்களை நோக்கி விரலை நீட்டுவதோ அர்த்தமற்றது என்பதை உலகம் அறிந்துகொள்ளவேண்டும். இந்த அழிவைத் தடுப்பதற்கான இறுதி வாய்ப்பு சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் எழுச்சி இங்கே நடப்பது போல் அமெரிக்காவின் வியட்நாம் போருக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கியதைப் போல் சிங்களத்திலேயும் எழுச்சி ஏற்படவேண்டும் என்று இந்தக் கட்டத்திலும் கோருகிறோம். அதேபோல் சர்வதேச சமூகமும் இந்த முறை விரைவான முடிவுகளை எடுக்கவேண்டும்.

நாங்கள் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்கப் போவதில்லை. இத்தகைய மாற்றங்களுக்குப் பின்னரும் கூட நாங்கள் உங்களோடுபேசிக்கொண்டு இருப்பதை மறந்துவிடக்கூடாது. எங்களைப் பொறுத்த வரையில் மக்களுக்காகத்தான் வீதிக்கு இறங்கினோம். ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தோம். அதே மக்கள் சொன்னதற்காக அமைதி முயற்சிகளில் இறங்கிஈடுபட்டோம். இப்போது அதே மக்கள் தாங்களாகவே வீதிக்கு இறங்கிப் போராட வருகிறபோது அதனுடைய விளைவுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். வரலாறு உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே சர்வதேச சமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார் கா.வே. பாலகுமாரன்.


# மரண அறிவித்தல்

## செல்லையா தம்பித்துரை



182, சேர் பொன். இராமநாதன் வீதி,திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் 'ராஜ் குடில்' ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பித்துரை (ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார் Magistrate Courts, கொழும்பு கப்பற்றுறை பிரதம அத்தியட்சகர்) அவர்கள் 14.12.2005 புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா - செல்லத்துரை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்லையா சீவரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும் பராசக்தியின் அன்புக் கணவரும் புவிராஜ் (ராஜன் - கனடா), பிருதிவிராஜ் (ரஞ்சன் -லண்டன்), சஞ்சீவராஜ் (குட்டி - லண்டன்),சண்முராஜ் (தயாளன் -கனடா), பகீரதராஜ் (ஜெயன் -பகீர்-World vision,முல்லைத்தீவு), சுகுணராஜ் (சுதன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி, சந்திரபவானி, தர்ஷினி, கோகிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆராதிகா, அர்ச்சுனராஜ், ராதவி, டிலன் ஆகியோரின் அருமைப் பேரனும் திருமதி மனோரஞ்சிதமலர் சீவரதினம் அவர்களின் மைத்துனரும் சீ.செல்வநாயகம்(செல்வா - சமுர்த்தி முகாமையாளர் - மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக 11.30 மணியளவில் கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ராஜ் குடில்'*
*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
*094 021 222 7467, 094 0776142584*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

(44306)(18-11-16)



# வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டம்

## யாழ். மாவட்டம் கட்டம் II - 2006

### தொகுதி - I இல் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்கள்

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். மாவட்டத்தில் தொகுதி ஒன்றில் கீழ்க்காணும் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். இக்கிராமத் தெரிவில் ஏதாவது குறைகள் / ஆட்சேபனைகள் இருப்பின் எனக்கு எழுத்து மூலம் ஏழு (07) நாள்களுக்குள் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ. இல. | பிரதேச செயலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | தெரிவுசெய்யப்பட்ட கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01. | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு | கோட்டைக்காடு |
| 02. | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு | அலமாவன |
| 03. | யாழ்ப்பாணம் | கோட்டை | கோட்டை |
| 04. | யாழ்ப்பாணம் | குருநகர் மேற்கு | குருநகர் மேற்கு |
| 05. | யாழ்ப்பாணம் | யாழ்.நகர் கிழக்கு | யாழ் நகர்கிழக்கு |
| 06. | யாழ்ப்பாணம் | நாவாந்துறை தெற்கு | நாவாந்துறை தெற்கு |
| 07. | யாழ்ப்பாணம் | பாசையூர் மேற்கு | பாசையூர் மேற்கு |
| 08. | காரைநகர் | காரை மத்தி | ஆயில் |
| 09. | காரைநகர் | காரை தெற்கு | பாலாவோடை |
| 10. | காரைநகர் | காரை தென்மேற்கு | நீலங்காடு |
| 11. | காரைநகர் | காரை தெற்கு | ஊரி |
| 12. | ஊர்காவற்றுறை | பருத்தி அடைப்பு | கோட்டையடி |
| 13. | ஊர்காவற்றுறை | பருத்தி அடைப்பு | பருத்தி அடைப்பு |
| 14. | ஊர்காவற்றுறை | புளியங்கூடல் | புளியங்கூடல்தெற்கு |
| 15. | கோப்பாய் | இருபாலை கிழக்கு | இருபாலை கிழக்கு |
| 16. | கோப்பாய் | உரும்பிராய் தெற்கு | யோகபுரம் |
| 17. | கோப்பாய் | அச்சுவேலி தெற்கு | அச்சுவேலி தெற்கு |
| 18. | கோப்பாய் | கல்வியங்காடு | ராஜ வீதி |
| 19. | கோப்பாய் | கோப்பாய் மத்தி | காந்தி கிராமம் |
| 20. | கோப்பாய் | அச்சுவேலி மேற்கு | தோப்பு |
| 21. | கோப்பாய் | இருபாலை கிழக்கு | வசந்தபுரம் |
| 22. | கோப்பாய் | வளலாய் | வளலாய் கிழக்கு |
| 23. | கோப்பாய் | நவக்கிரி | இத்தியடி |
| 24. | கோப்பாய் | புத்தூர் மேற்கு | வேம்பிராய் |
| 25. | கோப்பாய் | ஆவரங்கால்கிழக்கு | புத்தகலட்டி |
| 26. | கோப்பாய் | நீர்வேலி மேற்கு | ஆனந்தகானம் (வட கிழக்கு) |
| 27. | கோப்பாய் | புத்தூர் மேற்கு | நவக்கிரி (புத்தூர் மேற்கு) |
| 28. | கோப்பாய் | இருபாலை தெற்கு | ஆனந்தபுரம் திடல் |
| 29. | கோப்பாய் | நீர்வேலி தெற்கு | பரமேஸ்வரி |
| 30. | கோப்பாய் | நவக்கிரி | வடக்கு வேலி |
| 31. | கோப்பாய் | அச்சுவேலி மேற்கு | அச்சுநகர் |
| 32. | கோப்பாய் | அச்சுவேலி தெற்கு | காரத்தடி |
| 33. | கோப்பாய் | சிறுப்பிட்டி கிழக்கு | கோலைப்பறுகு |
| 34. | கோப்பாய் | வளலாய் | வளலாய் மேற்கு |
| 35. | கோப்பாய் | நீர்வேலி தெற்கு | கொலனி |
| 36. | கோப்பாய் | புத்தூர் மேற்கு | புத்தூர் |
| 37. | கோப்பாய் | புத்தூர் மேற்கு | இந்துசிட்டி |
| 38. | கோப்பாய் | சிறுப்பிட்டி மேற்கு | நாகதம்பிரான் |
| 39. | நல்லூர் | வண்ணார்பண்ணை வட மேற்கு | வண்ணார்பண்ணை வட மேற்கு |
| 40. | நல்லூர் | கொக்குவில் மத்தி கிழக்கு | கொக்குவில் மத்தி கிழக்கு |
| 41. | நல்லூர் | கோண்டாவில் மத்தி கிழக்கு | கோண்டாவில் மத்தி கிழக்கு |
| 42. | நல்லூர் | கொக்குவில் மேற்கு | கொக்குவில் மேற்கு |
| 43. | நல்லூர் | சங்கிலியன் தோப்பு | சங்கிலியன் தோப்பு |
| 44. | பருத்தித்துறை | துன்னாலை வடக்கு | புளியங்கன் |
| 45. | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | காக்கைதீவு |
| 46. | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | 3ஆம் கட்டை |
| 47. | சண்டிலிப்பாய் | மாரீசன்கூடல் | மாரீசன்கூடல் |
| 48. | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | முள்ளி |
| 49. | சண்டிலிப்பாய் | சண்டிலிப்பாய் மத்தி | சண்டிலிப்பாய் மத்தி |
| 50. | சண்டிலிப்பாய் | ஆனைக்கோட்டை | சோமசுந்தரம் வீதி |
| 51. | தெல்லிப்பழை | மல்லாகம் தெற்கு | இக்கிரானை |
| 52. | தெல்லிப்பழை | அளவெட்டி மேற்கு | முருங்கையற்புலம் |
| 53. | தெல்லிப்பழை | வசாவிளான் கிழக்கு | சுந்தரபுரம் |
| 54. | தெல்லிப்பழை | அளவெட்டி கிழக்கு | கம்பாலை |
| 55. | தெல்லிப்பழை | அளவெட்டி வடக்கு | திரிப்பு |
| 56. | தெல்லிப்பழை | கட்டுவன் மேற்கு | கட்டுவன்புலம் |
| 57. | தெல்லிப்பழை | மல்லாகம் மத்தி | மல்லாகம் மத்தி |
| 58. | தென்மராட்சி | கைதடி நாவற்குழி | கைதடி நாவற்குழி |
| 59. | தென்மராட்சி | மந்துவில் வடக்கு | மந்துவில் வடக்கு |
| 60. | தென்மராட்சி | கொடிகாமம் மத்தி | கொடிகாமம் மத்தி |
| 61. | தென்மராட்சி | மந்துவில் கிழக்கு | மந்துவில் கிழக்கு |
| 62. | தென்மராட்சி | மிருசுவில் வடக்கு | மிருசுவில் வடக்கு |
| 63. | தென்மராட்சி | கோவில்குடியிருப்பு | கோவில்குடியிருப்பு |
| 64. | தென்மராட்சி | குடமியன் | குடமியன் |
| 65. | தென்மராட்சி | இடைக்குறிச்சி | இடைக்குறிச்சி |
| 66. | தென்மராட்சி | மந்துவில் மேற்கு | மந்துவில் மேற்கு |
| 67. | தென்மராட்சி | வெள்ளாம்போக்கட்டி | வெள்ளாம்போக்கட்டி |
| 68. | தென்மராட்சி | நுணாவில் மத்தி | நுணாவில் மத்தி |
| 69. | தென்மராட்சி | வரணி இயற்றாலை | வரணி இயற்றாலை |
| 70. | தென்மராட்சி | கைதடி நுணாவில் | கைதடி நுணாவில் |
| 71. | தென்மராட்சி | கொடிகாமம் தெற்கு | கொடிகாமம் தெற்கு |
| 72. | தென்மராட்சி | நாவற்காடு | நாவற்காடு |
| 73. | தென்மராட்சி | மிருசுவில் தெற்கு | மிருசுவில் தெற்கு |
| 74. | தென்மராட்சி | தாவளை இயற்றாலை | தாவளை இயற்றாலை |
| 75. | தென்மராட்சி | கொடிகாமம் வடக்கு | கொடிகாமம் வடக்கு |
| 76. | உடுவில் | சுன்னாகம் மத்தி | சுன்னாகம் மத்தி |
| 77. | உடுவில் | சுவினை | சுவினை |
| 78. | உடுவில் | ஏழாலை வடக்கு | ஏழாலை வடக்கு |
| 79. | உடுவில் | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | புன்னாலைக்கட்டுவன் தெற்கு |
| 80. | உடுவில் | தாவடி வடக்கு | தாவடி வடக்கு |

**க.கணேஸ்**
**அரச அதிபர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.** (சி/46861) (24-11-17-18)

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
## சரவணமுத்து சிவலிங்கம்

31.10.2004 அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தந்தை அமரர் சரவணமுத்து சிவலிங்கம் அவர்களின் ஓராண்டு நினைவு நாளை நினைவுகூருகின்றோம்.

*அன்பான ஐயாவே! நீங்கள்*
*மறைந்து ஓர் ஆண்டு உருண்டோடி*
*விட்டதையா! நாங்கள் என்றும்*
*உங்கள் நினைவுடன் இருக்கின்றோம்.*

சரவணை கிழக்கு,
வேலணை.
(44304)
(54-15-46)
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி கனகசபை தில்லைநாயகம்

(சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி மத்தியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை தில்லைநாயகம் 19.12.2005 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கனகசபை (முன்னாள் அதிபர்-புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி உருக்குமணிதேவி கனகராசா, காலஞ்சென்ற கதிர்காமநாதன், பொறியியலாளர் ஸ்ரீ பத்மநாதன் (லண்டன்), பொறியியலாளர் லோகநாதன் (லண்டன்), திருமதி ஞானசகுந்தலா, தவநாயகம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகராசா (ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் சோமாஸ்கந்த கல்லூரி) Dr.அருந்ததி பாஸ்கரன் (லண்டன்), தவநாயகம் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சி திணைக்களம்) சிவசக்தி லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.12.2005) புதன்கிழமை சிறுப்பிட்டியில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு 4 மணி அளவில் எடுத்துச் செல்லப்படும். என்பதனை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மத்தி,*
*நீர்வேலி.*
*தொ. பே. இல.: 060-221-2559*
(சி-46865)
(54-15-46)
தகவல்:
**செ. தவநாயகம்**


புலமைப் பரிசில் திட்டம் - 2006
போட்டிப் பரீட்சை

இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்குமான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

போட்டிப்பரீட்சை நடைபெறும் திகதி
24.12.2005 காலை 10.00 மணி

பரீட்சை முடிவுகள் வெளியாகும் திகதி
28.12.2005 காலை 10.00 மணி

புதிய பிரிவுகள் ஆரம்பிக்கும் திகதிகள்
01.01.2006
03.01.2006
14.01.2006
பகல் 10.00 மணி

01.01.2006 அன்று பதிவு செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் பதிவுக்கட்டணத்தில் மேலும் 50% கட்டணச்சலுகை வழங்கப்படும

இயக்குனர்.
IIS, யாழ்ப்பாணம்.


# இந்தியா-இலங்கை டெஸ்ட் கிரிக்கெட்

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான இலங்கையணி தனது முதல் இனிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 247 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று இரண்டாம் ஆட்டத்தை தொடர்ந்த இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 398 ஓட்டங்களைப்பெற்றது (6)

# திட்டமிட்டபடி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாளர் யோ.ஜெயக்குமார் ஆகியோர் அடங்கிய குழுவினரே இம்மகஜரைக் கையளித்தனர்.

இந்த மகஜர்களின் பிரதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மனித உரிமைகள் ஆணைக் குழுத் தலைவர், யாழ். மாவட்ட அரச அதிபர், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ-6)

# தும்பளையில் சிசுவின் சடலம் மீட்பு

தும்பளை கிழக்குப் பகுதியிலுள்ள வீதியோரத்திலிருந்து சிசு ஒன்றின் சடலம் நேற்று மாலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. சன நடமாட்டம் அற்ற வீதியோரத்தில் இருந்தே இச் சிசுவின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து அப்பகுதி கிராம சேவையாளர் வசந்தகுமார் பொலீஸார் மூலம் சடலத்தை மந்திகை ஆதாரவைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டார். (ஒ-6-70)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு கமலாதேவி

கரவெட்டி வடக்கு,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கமலாதேவி அவர்கள் (17.12.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - மீனாட்சி தம்பதியரின் புதல்வியும் கனகம்மா, சிவனேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேந்திரன், மங்களேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் சுதாகரன் (லண்டன்),கீர்த்தனன் ஆகியோரின் சிறியதாயும் மணிஸின் அன்பு மாமியும் கதிரவேற்பிள்ளை (V.M.K. லொறி உரிமையாளர்) அவர்களின் பாசமிகு மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*சரஸ்வதி வித்தியாலய வீதி,*
*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி.*
(சி-46503)
(54-15-46)
தகவல்:
**மு. கதிரவேலு, கா. யோகரத்தினம்.**

## திருமதி அன்னப்பிள்ளை - சூசைப்பிள்ளை

அக்கத்தனை, இளவாலையைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி அன்னப்பிள்ளை - சூசைப்பிள்ளை அவர்கள் 18.12.2005 இல் தனது 96 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஜோன்பிள்ளை (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), பொன்மணி, ஜோச், பொன்னு, செல்லக்கிளி ஆகியோரின் தாயாரும் சறோஜினிதேவி, முத்துத்தம்பி(இளைப்பாறிய அதிபர்) குளோரியா, பபி, காலஞ்சென்ற அன்ரன்இராயப்பு ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து நாளை (21.12.2005) புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புனித அன்னமாள் ஆலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப் பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக இளவாலை அன்னமாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அக்கத்தனை,*
*இளவாலை.*
(44307)
(54-15-46)
தகவல்:
**சூ. ஜோன்பிள்ளை.**

## பொன்னுத்துரை பரம்சோதி



கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரம்சோதி (பிரபல புகையிலை வர்த்தகர்) அவர்கள் நேற்று (19.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும்பரமேஸ்வரன் (கனடா), புவனேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், சறோஜினிதேவி(கனடா), சிவலிங்கம் (கனடா), நித்தியானந்தராசா(கிராம சேவகர்), சற்குணராசா (கனடா), கிருபாகரன் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனைக்கோட்டை வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(44313)
(54-15-46)
தகவல்:
**மனைவி**
**திருமதி அன்னம்மா பரம்சோதி.**


# தமிழ் ஊடக அறிவியற் கல்லூரி

## *ஊடகவியல் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்*

ஊடகவியல் இன்றைய உலகை வனைகின்ற கருவியாகிவிட்டது. ஆனால் தமிழ் ஊடகவியலில் முறைமைசார் ஊடகவியலாளர்களுக்கு மிகுந்த பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்குத் தீர்வு காணும் நோக்கிலும், ஆரோக்கியமானதொரு ஊடகச்சூழலை ஏற்படுத்தும் நோக்குடனும் தமிழ் ஊடகவியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறி வார இறுதி நாட்களில் ஒரு வருடத்துக்கு நடைபெறும். விரிவுரை, செய்முறை, செயல்விளக்கம், களப்பயிற்சி, களஆய்வு என்ற ரீதியில் கற்கை இடம்பெறும். கற்பித்தலும் வழிகாட்டலும் நவீன சாதனங்களின் பிரத்தியேகத்துடன் துறைசார் அனுபவர்களால் நடத்தப்படும்.

முதற் கட்டமாக ஊடகவியல் சான்றிதழ் கற்கைநெறி 2006ல் ஆரம்பமாகின்றது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### *தகைமைகள்*

- (க.பொ.த) சா.தரத்தில் தமிழ் பாடத்தில் திறமைச்சித்தி உட்பட, சித்தியடைந்திருப்பதுடன் ஊடகவியலில் ஆர்வம்
  அல்லது
- ஊடகத்துறையில் பணியாற்றுதல்

### *கட்டணம்*

கற்கைநெறிக்கு 6000ரூபா கட்டணம் அறவிடப்படும். இது மூன்று தவணைகளாகச் செலுத்தப்படலாம்.

### *விண்ணப்ப முடிவு திகதி*

அனைத்து விண்ணப்பங்களும் 03.01.2006இற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக தமிழ் ஊடக அறிவியற் கல்லூரி, பிரதானசாலை, அறிவியல் நகர், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பத்துடன் சுய முகவரியிடப்பட்டு தபால்த்தலை ஒட்டப்பட்ட 8''X 4'' அளவுள்ள கடித உறையை இணைக்கவும்.

*பிரதானசாலை,*
*அறிவியல்நகர்,*
*கிளிநொச்சி.*
(சி-46504)
(53-54-15-46)
**தவிசாளர்,**
**தமிழ் ஊடக அறிவியற் கல்லூரி.**

# தேவை

- காசாளர் 2பேர் (ஆண்/பெண்)
- காவலாளி - 01
- சமையல் உதவியாளர்கள்

ஆவணத்துடன் நேரில் வரவும்
(21.12.2005 புதன்கிழமை முற்பகல் 11 மணிமுதல் 1 மணிவரை)

**கொசிரெஸ்ற்ரோரன்ட்**
இல.15, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.
(44310) T.P: 021 222 5899

# விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள TVS Champ Bike, Bajaj Sprit Scooter, LG Fridge Coolmax, Table Top Wet Grinder, Air Cooler, Stereo Tape Recorder மற்றும் Lap Top Model Computer, Pentium III Computer with Multimedia and Printer. வீட்டுப்பாவனைப் பொருள்களும் விற்பனைக்குண்டு. இன்றும் நாளையும் நேரில் பார்வையிடலாம்.

*39, பிறவுண் வீதி, நீராவியடி,*
(சி-44299) *யாழ்ப்பாணம்.*

**ராஜா** யாழ்ப்பாணம்
*பிரசன்னா, மீராஜஸ்மின்*
*நடித்த*
**கஸ்தூரிமான்**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்



ஷாம், சிநேகா, வடிவேல் நடித்த
காட்சி நேரம் மாற்றம்
10.30, 2.00, 5.15, 8.15
**ABCD** 10.30, 2.00 (பு. நே)
Super Star Hero Pom Cruise in *War of the World*
5.15, 8.15 (ஆங்கிலம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூரியா, த்ரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
காட்சி நேரம் - 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

**நாகம்ஸ்** சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த
**ஆணை**
தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00

# அமைதித் தீர்வு காண ஜனாதிபதிக்கு ஐ.தே.க. முழு ஒத்துழைப்பு நல்கும்

## நாடாளுமன்றில் நேற்று அறிவிப்பு

கொழும்பு,டிசெ.20

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான ஐந்தாம் நாள்விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற போது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தமது கட்சியின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு வெளியிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

வரவு-செலவுத் திட்டத்தின் இலக்குகளை அடைய வேண்டுமாயின் முதலாவதாக நாட்டில் அமைதியை ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது பற்றி ஜனாதிபதி அண்மையில் எங்களுடன் பேசினார். தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க முடியுமென்பதை நாம் கூறியிருக்கிறோம். ஆனாலும் அதற்கு முன்னர் இந்த அமைதி முயற்சிகள் குறித்தான தனது கூட்டமைப்புக் கட்சிகளின் கொள்கைகளையும், விடுதலைப் புலிகளின் கொள்கைகளையும் ஜனாதிபதி அறிந்துகொள்ள வேண்டும். அவர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை அவர் அறியவேண்டும்.

'மஹிந்தவின் சிந்தனை'என்ற அடிப்படையைக் கொண்ட இந்த வரவு- செலவுத் திட்டத்தில் புதிய விடயங்களெதனையும் நாம் காணவில்லை. முன்னதாக முன்னாள் நிதியமைச்சர் சரத் அமுனுகம சமர்ப்பித்திருந்த வரவு-செலவுத்திட்டத்தின் 90 வீதமான யோசனைகள் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இது மஹிந்தவின் சிந்தனையா, சந்திரிகாவின் சிந்தனையா, அமுனுகமவின் சிந்தனையா என்பது புரியவில்லை.

ஜனாதிபதி என்னதான் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தாலும் தொழிற்சங்கங்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்களை நிறுத்த ஒருவித செயற்பாடுகளும் இல்லை. இலங்கைப் போக்குவரத்துச் சபையில் தொழிற்சங்க உறுப்பினர்கள் பழிவாங்கப்படுகின்றனர். அவர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இதுதான் நிலைமை. இது மாற்றியமைக்கப்படவேண்டும்.-என்று கூறினார் ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி.

(க)

## துணைவேந்தருக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் என அனைவரும் தாக்கப்பட்டுள்ளனர். இச்செயலை இராணுவத் தின் திட்டமிட்ட ஓர் அராஜகத்தின் உச்சக் கட்டமாகவே நாம் கருதுகின்றோம். இராணு வம் இவ்வாறான அராஜக நிகழ்வுகளை அரங்கேற்றுவதனால் மாணவர்களாகிய நாம் அடங்கி ஒடுங்கிப் போவோம் எனக் கனவு காண வேண்டாம் என ஆணித்தரமா கக் கூறி வைக்க விரும்புகின்றோம். மாறாக அனைத்து மாணவ சமூகமும் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய சூழலை இது உரு வாக்கி உள்ளது என்பதனை மிகுந்த மன வருத்தத்துடன் இராணுவத்தினருக்குக் கூற விரும்புகிறோம்.

இன்று முதல் அனைத்து உயர் கல்விசார் மாணவர்களும் தொடர்ச்சி யான கல்விச் செயற்பாட்டினைப் பகிஷ்கரிப்ப தோடு, இதற்கான தீர்வினை உரியதரப்புக் கள் விரைந்து தராவிடின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அவர்களின் வழியிலேயே இடம் பெறும் எனவும் எச்சரிக்கிறோம். - என்று உள்ளது.

(ஐ)

## அடக்குமுறைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சான்றாகின்றன. கிருஷாந்தி, ரஜனி, சாரதாம்பாள் பாலியல் படுகொலைகள் வரிசையில் மிருசுவிலில், வல்லிபுரக் கோயில் தீவகம் அல்லைப்பிட்டிப் பகுதி எனத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் புங்குடுதீவில் தர்சினி மீதான பாலியல் கோரச் சம்பவங்கள் நீளுகின்றன.

எங்கும் சுற்றிவளைப்பு, தேடுதல்கள் என தமிழன் ஏறிமிதிக்கப்படுகின்றான். தெருத் தெருவாக சந்திக்கு சந்தி இராணுவ அடாவடிக் கும்பல் நிலைகொண்டுவிட்டது. தமிழனின் சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத்தப் படுகின்றது. அவனது மண்ணிலேயே அவன் அவமதிக்கப்படுகின்றான்.

தமிழ் மக்கள் மீது தொடரும் அடாவடித் தனங்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவிக்க அமைதி ஊர்வலமாக யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையில் சென்றோரையும் விட்டுவைக்கவில்லை. யாழ்.பல்கலைக்கழக அறிவு ஜீவிகள், மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடும், தடியடியும், சப்பாத்துக்கால் உதையும் நடந்தேறின. புண்பட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் மருத்துவமனையில் கிடக்கின்றார்கள்.

எங்கும் சிறிலங்கா படையின் வன்முறையும் அச்சுறுத்தலும் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. உயர் அறிவு ஜீவிகள் தொடக்கம் சாதாரண விவசாயிகள் தொழிலாளர்கள், பெண்கள், முதியோர், சிறுவர்கள் என எவரையும் பேரினவாத அரச பயங்கரவாதம் கடந்த காலத்தில் விட்டுவைக்கவில்லை. இனியும் நீ விட்டுவைக்கப் போவதும் இல்லை என்பது எமக்குத் தெரியும். அதனால் சிறிலங்கா படைகளின் அராஜகத்தை அடக்க நாம் தயாராகிவிட்டோம்.

தமிழர் தங்களை தாங்களே தற்காத்துக் கொள்ளத் தயாராகிவிட்டனர்.

தமிழன் நிமிர்ந்துவிட்டான்!

இனியும் பொறுக்கப்போவதில்லை.

பொங்கி எழும் மக்கள் படை தயாராகி விட்டது.

எனவேதான் சிங்களப் படைக்கு இது ஓர் எச்சரிக்கை.

உன் அடாவடித்தனத்தை நிறுத்து இல்லையெனில் யாழ்.மண் உனது புதை குழியாகிவிடும். அழிக்கப்படுவாய்!

- பொங்கி எழும் மக்கள் படை.

- என்றுள்ளது.

## கலைப்பீடாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கினர் என்று கூறப்படுகிறது. 61 வயதான கலைப்பீடாதிபதிக்கு முதுகில் பலமான உட்காயம் உட்பட உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பொருளியல்துறை விரிவுரையாளரான நல்லதம்பி பேரின்பநாதனும் தாக்குதலில் குண்டடிபட்டுக் காயமடைந்தார். துப்பாக்கிச் சன்னம் ஒன்று அவரது வலதுகால் தொடைப் பகுதியில் பாய்ந்தது. 56வயதான விரிவுரையாளர் பேரின்பநாதன் யாழ்.பொது மருத்துவமனையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் தங்கராஜா காண்டீபன் (வயது 26) தலையில் படுகாயமடைந்தார். படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் அவரது தலையின் மேல் மண்டை ஓட்டுப் பகுதியில் ஆழமான பிளவு ஏற்பட்டிருக்கிறது. மூளைப் பகுதி சேதமடையாததால் அவருக்கு உயிர் ஆபத்து இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். காயமடைந்தவர்களில் யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏனையோரின் பெயர் விவரம் வருமாறு:-

- சி.திருச்செந்தூரன் - கலைப்பீட மூன்றாம் வருட மாணவன் (வயது 22)
- இ.சுரேஸ் (வயது 21) - கலைப்பீட மாணவன்.
- இ.செந்தில் (வயது 23) - வணிகத் துறை மாணவன்
- வி.ஜெயன் - வயது 28) - 'தினகரன்' பிரதேச செய்தியாளர்.
- ஜெ.ஜெராட் (வயது 23) - 'நமது ஈழ நாடு ' பத்திரிகைச் செய்தியாளர்.
- எஸ்.சபேஸ்வரன் (வயது 26) - 'தினக்குரல்' பத்திரிகைச் செய்தியாளர்
- எஸ்.பிரதீபன்(வயது 23) - 'உதயன்' பத்திரிகை அலுவலகச் செய்தியாளர்

காயங்களுக்கு உள்ளான மேலும் பெரும் எண்ணிக்கையானோர் தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றனர்.

(ஐ-7-12-190)

## செல்போன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களைத் தவறவிட்டவர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது ஆளரவமற்ற அங்கு தவறவிட்ட பொருள்கள் எவையும் இருக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

## உதயன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் எஸ்.பிரதீபன் மற்றும் யாழ்ப்பாணத்தில் வெளியாகும் 'தினக்குரல்', 'நமது ஈழநாடு' பத்திரிகைகளின் அலுவலகச் செய்தியாளர்கள், 'தினகரன்' பத்திரிகையின் யாழ். பிரதேச நிருபர் ஒருவர் ஆகியோரே படையினரால் தாக்கப்பட்டனர்.

படையினர் துப்பாக்கிப் பிடியினால் கண்டபடி தக்கியதில் இவர்களுக்குப் பலத்த உட்காயங்கள் ஏற்பட்டன.

(ஐ-12-7-86)

## தேசத்தையும் மக்களையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நடக்கும் சம்பவங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக நோர்வேக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருக்கிறோம். இன்றும் (திங்களன்றும்) அவசரமாகத் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் குறித்து எமது சமாதான செயலகம் ஊடாகத் தெரிவித்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ள அச்ச சூழலுக்கு உடனடி முடிவு காணவேண்டும் என்று நோர்வேயை வலியுறுத்தியுள்ளோம்.

தொடர்ந்து பொதுமக்களைத் தாக்கி, அவர்களைக் காயப்படுத்திக்கொண்டிருந்தால், பொதுமக்களின் கிளர்ச்சியை எவராலும் அடக்கமுடியாத சூழல் வரப்போகின்றது. இந்த ஆபத்தான நிலையை நோர்வேக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்;

அரசின் சமாதானச் செயலகம் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக நேரடிப் பேச்சுக் குறித்த தங்கள் நிலைப்பாட்டைத் தந்தார்கள். அதேவழியில்தான் எமது பதிலை அனுப்பியிருக்கிறோம். அது அரசுக்கு ஏன் கிடைக்க வில்லை என்பதுதான் எங்களுக்குத் தெரியவில்லை. பதில் எம்மால் அனுப்பப்பட்டுவிட்டது என்பது உறுதி.

நாங்கள் எப்போதுமே சமாதானத்தைப் பற்றியும், தீர்வைப்பற்றியும் அர்ப்பணிப்போடு செயற்பட முனைந்தாலும், சிங்களப் படைகளும், இலங்கை அரசும் ஒரு தீவிர யுத்த சூழலுக்குள்ளே தள்ளிக்கொண்டு போகின்ற எதிர்முனைப்பையே காட்டுகின்றன. இதனால் எதுவுமே எங்கள் கைகளில் இல்லை. எதிர்காலம், அடுத்த கட்டம் என்பன குறித்து மஹிந்த ராஜபக்ஷவிடமும் அவரது படைத் தளபதிகளிடமும் கேட்கவேண்டிய நிலைக்குத்தான் நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி 14 நாள் அவகாசம் வழங்கி யுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும். எம்மைப் பொறுத்தவரையில் அதுவே நீதியானது. இருதரப்புக்களும் ஏற்றுக்கொண்ட நடைமுறை அதுதான். ஆனால், இப்போது இலங்கைப் படைகள் செய்கின்ற அத்துமீறல்கள், வன்முறைகளைப் பார்க்கும்போது, அவர்கள் தமிழ் மக்களுக்கு அப்படி ஒருகால அவகாசத்தை வழங்குவார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. இது மிக மோசமான செயற்பாடு என்றுதான் நினைக்கின்றேன்.

எங்களைப் பொறுத்தவரையில் யுத்த நெருக்கடி இல்லாமல், பேசி ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்ப்பதையே எப்போதும் நாம் எமது உறுதியான நிலைப்பாடாக வைத்திருக்கிறோம்.

ஆனால், யுத்தத்தையும் வன்முறையையும் எம்மீது திணிக்கின்ற போது அதை எதிர்த்து எமது தேசத்தையும், மக்களையும் தற்காத்துக்கொள்வதையும் நாங்கள் உதாசீனப்படுத்த முடியாது. அப்படியான ஒரு நிலையையும் எங்கள் தலைமைப்பீடம் உறுதியாகக் கொண்டிருக்கிறது. அதை எப்போதும் தெளிவாக்கிக்கொண்டு வருகின்றோம்.

எங்கள் தலைமைப்பீடத்தை சீண்டுகிற - மக்களைச் சீண்டுகிற - போக்கை இப்போது தீவிரப்படுத்தியிருக்கிறார்கள். இது எங்கு போய்முடியும் என்பதை இப்போது சொல்ல முடியாது. இனிவரும் நாள்கள்தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும். - என்றார் அரசியல்துறைப் பொறுப்பாளர்.

(க-3)


விக்னா கல்வி நிறுவனம்
A/L 2006, 2007
சூழற் புவியியல் பகுதி I (m.c.q)
பரீட்சையும், வினாவிடை தொடர்பான கலந்துரையாடலும்
திரு.பாபு
காலம்: 21.12.2005
காலை 8.30 (மு.ப)
Note: வெளிமாணவருக்கு அனுமதி வழங்கப்படும்



சூழற் புவியியல் - I
M.C.Q பரீட்சையும் வினா விடை தொடர்பான கலந்துரையாடலும்
By:N.பாபு
21.12.2005 புதன்
12 மணி (பு.ப)
புதிய யூனிவேசல் அக்கடமி
(யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே)


## பல்கலை சமூக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் இந்த அமைதிப் பேரணியைப் படம் எடுப்பதற்காகவும் செய்திகளைத் திரட்டுவதற்காகவும் வந்திருந்த பத்திரிகைச் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் படையினர் தாக்கத் தொடங்கினர். பலருடைய படப்பிடிப்புக் கருவிகளும், எழுதுகருவிகளும் பறித்து வீசப்பட்டன. ஊடகவியலாளர்கள் என்பதை நிரூபிப்பதற்கான அடையாள அட்டைகளைக் காட்டிய செய்தியாளர்களைத் துப்பாக்கிப் பிடியால் தாக்கிய படையினர் , அடையாள அட்டைகளையும் பறித்து வீசினர்.

படையினரின் வேட்டுகளுக்கு அஞ்சி பாதுகாப்புத் தேடி வீதியோரம் இருந்த வீடுகளை நோக்கி ஓடிய மாணவர்கள் நெரிசலில் சிக்கியும் மோதி வீழ்ந்தும் காயமடைந்தனர்.

பேரணியின் முன்பாக கூட்டமாகச் சென்றுகொண்டிருந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோரை நெருங்கிச் சென்றும் படையினர் தாக்குதல் நடத்தினர்.

துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதஸ்ம் பேரணியில் கலந்துகொண்டார். எனினும் படையினரின் தாக்குதல்களில் இருந்து தெய்வாதீனமாக அவர் தப்பிவிட்டார் என்று ஒரு செய்தி தெரிவித்தது.

பேரணியின் முன்னே சென்றுகொண்டிருந்த - ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஓட்டோக்கள் இரண்டையும் படையினர் அடித்து நொறுக்கி சின்னாபின்னமாக்கினர். அந்த ஓட்டோக்களுக்குள் அமர்ந்திருந்த மாணவர்களையும் அவர்கள் வெளியே இழுத்து நையப்புடைத்தனர்.

படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி வீதியோரமாக இருந்த வீடுகளுக்குள் மதிலேறிக் குதித்துப் பாதுகாப்புத் தேட முயன்ற பலர் இராணுவத்தினரால் துரத்தித் துரத்தித் தாக்கப்பட்டனர்.

வேட்டுச் சத்தங்களாலும் மரண ஓலத்தினாலும் அப்பிரதேசம் ரணகளமாக மாறியது. காயமடைந்த பேராசிரியர்கள், மாணவர்கள் போன்றோர் சம்பவ இடத்தில் இருந்து தூக்கிச் செல்லப்பட்டு பின்னர் வாகனங்கள் மூலம் யாழ். பொது மருத்துவமனைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற பலாலி வீதி முழுவதும் துருப்பினர் குவிக்கப்பட்டனர். போக்குவரத்தும் தடுக்கப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக்கழகச் சூழலிலும் அருகே அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகப் பகுதியிலும் கடந்த சில தினங்களாக படையினர் மேற்கொண்ட அடாவடித்தனமான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே நேற்றைய அமைதிப் பேரணி ஒழுங்குசெய்யப்பட்டது.

முதலில் காலை 10 மணியளவில் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இந்தப் பேரணி தொடர்பான ஏற்பாடு பற்றிக் கலந்துரையாடுவதற்காக மாணவர்கள் குழுமினர்.

அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள், மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் கூடி பேரணியை நடத்துவது என்று தீர்மானித்தனர். மாணவர்களைச் சீண்டும் வகையிலான இராணுவத்தினரின் அடாவடித்தனமான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தக்கோரும் மகஜர் ஒன்று அங்கு வாசிக்கப்பட்டது. பின்னர் அந்த மகஜரை பேரணியின் முடிவில் கண்காணிப்புக்குழுவின் தலைவர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், அரசாங்க அதிபர் ஆகியோருக்கு கையளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஐ-7-12-15-78-86-139-190)


புதிய வீடியோ கிரபிக்ஸ் வெளியீடு
Background DVD's
Croma DVD's
Title Software CD's
(44235)(30-12-17)
T.P.: 0777 917610
87, பலாலி வீதி,
திருநெல்வேலி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.